611 611

வாரப் பத்திரிகை 6-8-30




OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - NOV 1930
MADRAS

முக்கிய விஷயங்கள்

---

ஆலயப் பிரவேசம்

ஏன் பட்டணம் வந்தீர்கள்?

—ஸ்ரீ வி. நாராயணன், எம்.ஏ. எம்.எல்.

ஞாபகப்பூ

—"ரவிகன்"

ஒடிந்தகை

—ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி

மாருதியில் என் கட்டுரை

—ஸ்ரீ வி. ஆர். சுந்தரராமன், எம்.ஏ.

காரியாலயம்: 312, தம்பு செட்டித் தெரு, சென்னை

தனிப்பிரதி— ஒரு அணா

வருஷ சந்தா ரூ. 4.

THE BHARATA MANI
312, Thambu Chetty St., Madras

(A Tamil Weekly)

Editor:
K. S. VENKATARAMANI

## பரசுராம சித்த ஔஷதாச்ரமம்

### திருவண்ணாமலை (N. A. Dt.)

நீடித்த வியாதிகளை, முப்பு குருவால் செய்த ஔஷதங்களால் நிவர்த்தி செய்யப்படும். டியூபர்குலோஸிஸ் என்ற க்ஷய ரோகத்திற்கும், நீரழிவு ரோகத்திற்கும் விசேஷ ஔஷதங்கள் இருக்கின்றன.

### முப்புகுரு சேர்ந்த "சித்த எண்ணெய்"

இது சர்வரோக நிவாரணி, பரம சஞ்சீவி. ஒரு தடவை உபயோகித்தால் இதன் பெருமை தெரியும். அனேக டாக்டர்களால் பரிசீலனை செய்யப்பெற்றது. குழந்தைகள் பால் கட்டிகளுக்கும், ஈரல் கட்டிகளுக்கும் நிகரற்ற ஔஷதம்.

ஸோல் டிஸ்டிரிபியூடர்கள் :

**ஸாரதா ஸ்டோர்ஸ், காரைக்குடி.**

ஸ்டாக்கிஸ்ட்ஸ் :

**அப்பா அண்டு கம்பெனி,**
மதறாஸ்.

**T. N. நாகலிங்கம் பிள்ளை,**
மதுரை.

**மீனாக்ஷி ஸ்டோர்ஸ்,**
தேவகோட்டை.

**T. N. சோக்கலிங்கம் பிள்ளை,**
அண்டு சன்ஸ், மதுரை.






## இண்டோ கமர்ஷியல் பாங்கி லிமிடெட்.

ரிஜிஸ்டர்டு தலைமை ஆபீஸ் :- மாயவரம்
சென்ட்ரல் ஆபீஸ் :- சென்னை

அதிகாரம் பெற்ற மூலதனம் ... ரூ. **25,00,000**
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் ... ரூ. **21,25,000**
செலுத்தப்பட்ட மூலதனம் ... ரூ. **17,54,368**

சென்னை ஆபீஸ்கள்

ஆர்மீனியன் தெரு, சைனா பஜார் ரோடு, மாம்பலம், மைலாப்பூர், திருவல்லிக்கேணி.

டைரக்டர்கள்

ஸ்ரீ டி. ஆர். வேங்கட்டராம சாஸ்திரிகள், சி.ஐ.இ.
ஸ்ரீ என். வி. ராகவன், (மாஜி அகவுண்டண்டு ஜனரல்).
ஸ்ரீ வி. வெங்கடராமய்யர், எம்.ஏ., பி.எல்.
ஸ்ரீ ஆர். விஸ்வநாதய்யர், பி.ஏ., பி.எல்.
ஸ்ரீ கே. சிவஸ்வாமி ஐயர்.
ஸ்ரீ கே. சுப்பய்யர்.
ஸ்ரீ ஆர். எஸ். யே. சங்கரய்யர்.
ஸ்ரீ எஸ். என். என். சங்கரலிங்க ஐயர்,
(மானேஜிங் டைரக்டர்)



## ஆரோக்யம்—இன்பம்—வீர்யம்




மனித சரீரத்திற்கு இம் மூன்று உணர்ச்சிகளையும் அளிப்பதற்கு ரத்த விருத்தியே மூல காரணம். ஆயாசம், பலஹீனம், ரத்தக் குறைவு, நம்புச் சோர்வு முதலியவற்றினால் வாழ்க்கையின் சுகபோகங்களை யனுபவிக்க சக்தியற்றவர்க்கு **ஜீவாம்ருதம்** ஓர் புதிய உணர்ச்சியை யூட்டி, நரம்பு சக்தி, மனோ தைர்யம், ஆரோக்கியம், இன்பம், வீர்யம் முதலியவற்றை மேன்மேலும் பெருகச் செய்கின்றது.

## ஜீவாம்ருதம்

**எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.**

தயாரிப்பவர்கள்:—

**ஆயுர்வேதாஸ்ரமம்,**

**151, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, மதருஸ்.**



# ஒரே முறையில் நிவர்த்தி!

"கால், இடுப்பு, முதுகு இங்கெல்லாம் வலியால் என் மனைவி இரண்டு வருஷம் கஷ்டப்பட்டாள். சினேகிதர்கள் யோசனைப்படி, கடைகளில் கிடைக்கும் பேடண்ட் மருந்துகளை கொடுத்தேன் பலனில்லை. கஷ்டம் அதிகமாகி வருகையில் இன்னொரு ஸ்னேகிதர் **லோத்ரா** கொடுக்கும்படி கூறினர். வரவழைத்துக் கொடுத்தேன். முதல் டோஸிலேயே நிவர்த்தி ஏற்பட்டது.

**ஷண்முகம் பிள்ளை,**
பாங்கர், ஈரோட்."

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

## கேசரிகுடீரம்

ராயப்பேட்டை, மதராஸ்.

---

தமிழர்களுக்கு

## ஓர் நல்விருந்து!

மஹாகவி ஸ்ரீ பாரதியாரின்
நூல்களைப்படித்து ஆனந்தமடையுங்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| 1. காவியங்கள் Vol I | 2 | 8 |
| 2. வசனங்கள் Vol II | 2 | 8 |
| 3. கட்டுரைகள் Vol III | 2 | 8 |
| 4. பகவத் கீதை (காலிகோ) | 0 | 7 |
| ஷை (ராப்பர்) | 0 | 5 |
| 5. பாரதி விளக்கம் (சரித்திரம்) | 0 | 4 |
| 6. ஞான ரதம் (ஹிந்தி) | 0 | 7 |
| 7. தராசு (ஹிந்தி) | 0 | 5 |
| 8. Agni and other Poems & Translations | 1 | 0 |
| 9. Essays and other Prose fragments | 1 | 0 |

**பாரதி பிரசுராலயம்,**
567, ஹைரோடு, திருவல்லிக்கேணி,
சென்னை.

---

**மன்னார்குடி டி. முன்சீப் கோர்ட்டில்**
திருத்துறைபூண்டி டி. மு. S.C. 374/1932

ரத்தினசாமி பிள்ளை—வாதி

மாணிக்கத்தம்மாள்
நாகரத்தினம்மாள்
சுப்பிரமணிய பிள்ளை } 3, 4, 5 பிரதி வாதிகள்

ஷை 3, 4, 5 பிரதிவாதிகளுக்கு வாதி வக்கீல் கொடுத்த நோட்டீஸ்.

ஷை நெ. ஜப்தி செய்த ஸ்தாவர சொத்துக்களை இஸ்தியார் பிறப்புவித்து ஏலம் போடவும், ஷை சொத்துக்களை வாதியும் வாதி வக்கீலும் ஏலம் கேட்கவும் ஏலத் தொகையை டிக்கிரி தொகையில் உளவடைத்துக் கொள்ளவும் அனுமதி கொடுக்கவும், வாதி மனுக்கள் கொடுத்து நோடீசுக் குத்தரவாகி 14-8-39 ஈரங்கி போடப்பட்டிருக்கிற விவரம் அறியவும்.

N. மீனாட்சிசுந்தரம் ஐயர்,
28-7-'39. ப்ளீடர்.

# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

—பாரதி

ஆசிரியர்: கே. எஸ். வேங்கடரமணி.

| | | |
|---|---|---|
| மாலை 2 | ஞாயிறு 6-8-39 பிரமாதிஸூ ஆடிமீ 22உ | முத்து 45 |


## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| ஆலயப் பிரவேசம் | ... ... ... ... ... | 576 |
| வார நடப்பு | ... ... ... ... ... | 579 |
| ஏன் பட்டணம் வந்தீர்கள்? | ... ஸ்ரீ. வே. நாராயணன், எம்.ஏ. எம்.எல். | 581 |
| அவன் வருகை | ... ... ஸ்ரீ. ர. ஷண்முகசுந்தரம் | 583 |
| ஞாபகப்பூ | ... .... ... "ரஸிகன்" | 584 |
| ஒடிந்த கை | ... ஸ்ரீ. கே. எஸ். வேங்கடரமணி | 587 |
| மாருதியில் என் கட்டுரை | ... ஸ்ரீ. வி. ஆர். சுந்தரராமன், எம்.ஏ. | 590 |
| குப்பு தீக்ஷிதர் | ... ஸ்ரீ. ஆர். பங்காருஸ்வாமி, பி.ஏ.பி.எல். | 593 |
| மளிகைக்கடை மாணிக்கம் செட்டி | ... ஸ்ரீ. ஜி. பாலசுப்ரமண்யம் | 596 |
| சிறுவர் பகுதி | ... ... ஸ்ரீ. கே. சிவராமன் | 600 |
| இலகு வைத்தியம் | ... ஸ்ரீ. பி. எஸ். ராமநாதய்யர் | 603 |
| விமர்சனம் | ... ... ... ... ... | 604 |
| வலை வீச்சு | ... ... ... ... ... | 605 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# ஆலயப் பிரவேசம்

ஆலயப் பிரவேசத்திற்காக ஐந்துவருஷ காலத்திற்கு முன் முதல் முதல் சென்னையில் கையொப்பமிட்டவர்களில் நான் ஒருவன். அந்த சமயம் இது விஷயமாய் காங்கிரஸ் தீவிரமான பிரசாரம் ஆரம்பம் செய்து நடத்திக்கொண்டு வந்தது. மகாத்மா காந்தியும் சக்ரவர்த்தி ராஜகோபாலாசாரியாரும் (இப்பொழுது நமது பிரதம மந்திரி) இது விஷயம் பலமான தொண்டு விடாமுயற்சியுடன் செய்து கொண்டு வந்தார்கள். இந்த இயக்கம் எங்கும் காட்டுத் தீ போல் பரவி பொதுப் பட எல்லா ஜனங்களுக்கும் உற்சாகத்தை ஊட்டிற்று. நானும் அதில் மூழ்கி நின்றேன்.

பல உத்தமர்களை ஒன்று சேர்த்த இந்த இயக்கம் ஐக்கிய முறைக்கும், தேச முன்னேற்ற முறைக்கும் ஓர் வழியாகலாமென்று நானும் நினைத்தேன். ஆயிரம் வருஷ காலமாய் நம்மை நிழல்போல் பின் தொடரும் அடிமைத் தனத்தையொழிக்க இதுவும் ஒரு வழியாகலாமென்று எண்ணினேன். ஆனால் இப்பொழுது அடுப்பிவிட்ட தீ வீட்டையழிக்கும் தீயாகும் போல் தோன்றுகிறதே! இரண்டு வருஷ காலத்திற்குள், ஐக்கியம்போய் நமது நாட்டில் பல பிளவுகள் ஏற்பட்டுவிட்டன! அரசியல் விஷயங்களிலும், பொருளாதார விஷயங்களிலும் பிளவுகளும் குழப்பங்களும் நியாய வழியில் ஏற்பட்டால் பாதகமில்லை! வெண்ணெயெடுக்க தயிரைக் கடைந்து குழப்பமிடுவது அவசியம் போல், இந்த வழிகளில் நியாயமாய் ஏற்படும் குழப்பத்தால் கடைசியாக லாபமுண்டு, நஷ்டமில்லை. ஆனால் இதர விஷயங்களில், அதாவது பழக்க வழக்கங்கள், ஆசார அனுஷ்டானங்கள் மத சம்பந்தமான விஷயங்களில் சர்க்கார் அதிகாரத்தையும், தற்கால பலத்தையும் ஓட்டி சட்ட மூலமாய்ப் பிளவுகளும், குழப்பங்களும், ஏற்பட்டால் அவைகள் வெட்டுக்காயங்கள்போல் பிந்தி ஆறினாலும் எந்நாளும் மாறாத ஓர் வடு எப்பொழுது மிருக்கும். ஐக்கியம் போய் பிளவுகள் ஏற்பட்டால் காரணம் எதுவாயிருந்தாலென்ன, முடிவுதானே நமக்கு முக்கியம்?

ஆலயத்தின் கருத்தென்ன? ஹிந்து மதத்தில் ஆத்ம ஞானத்தையும், மோக்ஷத்தையும் அடைய ஆலயங்களை ஓர் ஏணிப்படியாக நிர்மாணம் செய்திருக்கிறார்கள். நமது கோவில்களில் எல்லோரும் ஒன்று சேர்ந்து தொழவேண்டுமென்பது (Congregational Worship) முக்கிய கருத்தில்லை. அவரவர்கள் தங்கள் மனம்போல், தங்கள் வழக்கம்போல் ஆலயத்திற்குச் சென்று ஆண்டவனைத் தொழுது அகத்திற்குத் திரும்புவது வழக்கம். இதர மதங்களைப் போல எல்லோரும் ஒருஆலயத்திற்குக் குறிப்பிட்ட நேரத்தில் போகத்தான் வேணுமென்று சம்பிரதாயமும் கிடையாது, கட்டுப்பாடும் கிடையாது. ஒரே குறிப்பிட்ட கோவிலுக்குத்தான் எல்லோரும் போக வேணுமென்றும் நமக்குள் விதி கிடையாது, வழக்கமும் கிடையாது. ஆதித்யனை நோக்கி அத்வைதி கையெடுத்துக் கும்பிட்டாலும் அதுவே அவனுக்குக் கோவில். ஒரே பலன். உள்ளத்தில் சாந்த வெள்ளம் பெருகவேணுமென்பதே நோக்கம். சும்மா இருவென்றால், இருக்கமாட்டேனென்று, பால் குடித்து

பயமறியாத இளங்கன்றுபோல் துள்ளிக் குதித்து சாக்கடையில் விழும் சாந்தமறியாத பொய் மயமான மனதைக் கால் பணி நேரம் ஈசன் முன் கட்டுப்படுத்தி, சாந்தப்படுத்தும் முறையே ஆலயத்தின் நோக்கம்.

வேறுபாடான பல ஜனங்களையும் அரசியல் மார்க்கத்திலாவது அல்லது வேறு எவ்விதத்திலாவது ஒரே சமூகமாய்ச் சேர்த்து ஒரு 'நேஷனாக' ஒன்று சேர்க்க வேண்டுமென்கிற கருத்து ஆலயத்திற்குக் கிடையாது. ஆகையால் தான் ஒரே காலத்தில் எல்லோரும் சேர்ந்து ஈடுபட்டு ஒரே கோவிலில் தொழுவதும், நமது பழக்க வழக்கங்களில் ஒரு நாளும் கிடையாது.

இருந்தாலும் நமது வேற்றுமையையும் அடிமைத்தனத்தையும் தொலைப்பதற்கும் பல பிளவுகளைப் பசையிட்டு ஒன்று சேர்ப்பதற்கும் எல்லோரும் மனமொப்பிய ஆலயப் பிரவேசம் ஒருக்கால் ஒரு வழியாகுமென்று நினைத்தேன்! ஆனால் இப்பொழுது பாருங்கள்! பிள்ளையார் பிடிக்க குரங்காக முடிந்துவிட்டது! இது சிலர் கைராசி! எதைத் தொட்டாலும் அது சுருங்கும்; விகசிக்காது.

இதற்குக் காரணங்களென்ன? இறுமாப்பில்லாத அன்புடன்கூடிய பிரசாரத் தொண்டையே கைவிட்டு அரசியல் அதிகாரத்தையும், சட்டத்தின் ஈட்டி முனையினுள்ள அன்பையும் நாடியதே காரணம். பண்டைய காலம் முதல் பல ஜனங்கள் உள்புகுந்த நமது பாரத நாட்டில் எந்த சீர்திருத்தங்களையும் பிரசாரத்தையொட்டியே கொண்டு வர வேணும். சட்டத்தின் ஈட்டி முனை அதிகாரத்தை வைத்துக்கொண்டு அந்த சீர்திருத்தங்களை நிறைவேற்ற முடியாது. அதற்குக் கொம்பில் கனிந்த கனியின் சுவையிருக்குமா?

அரசியல், பொருளாதார விஷயங்களில் கூட பிரசார மார்க்கமே சன்மார்க்கம். வாய்க்கால் வெட்டி, கரை போட்டு மராமத்து செய்த பிறகல்லவோ ஆற்று வெள்ளத்தை வாய்க்காலிலும், வயலிலும் திருப்பி விடவேணும்? அரசியலிலே இப்படியென்றால் நமது பழக்க வழக்கங்கள், ஆசாரங்கள், மத விஷயங்கள் (Social, Sociological & Religious matters) இவைகளில் பிரசாரங்கள் செய்து சீர்திருத்தங்கள் கொண்டு வருவதைத் தவிர வேறு விதமாய், சட்ட மூலமாயும், மெஜாரிடி மூலமாயும், அவரவர்கள் உண்மையில்தான் நினைத்தபடியே தற்காலம் வகிக்கும் அதிகாரத்தைக் கொண்டு சட்டதிட்டங்கள் செய்ய நியாயமில்லை. அப்படி மாறுபாடாய் நாம் செய்துகொண்டு வந்தால் நமது நாகரிகத்தின் நய சுகங்கள் ஜீவ தாதுக்கள் எல்லாம் நிச்சயமாய் அழிந்து போய்விடும். சாந்தம் குடிகொண்ட நமது நாட்டை விட்டு மேன்மை விலகி விடும். சண்டை, சச்சரவுகள் அதிகரிக்கும்.

நவீன மேல் நாட்டு நககரீகத்தில் எற்பட்டிருக்கும் சர்க்கார் அதிகாரத்தின் குணத்தை நாம் என்னவென்று சற்று பார்ப்போம். அதுஒரு தூங்குமூஞ்சிமரம் போல், இதர வாசனைச் செடி கொடிகளையும், ஔஷத மூலிகைகளையும் தன் சமீபத்தில் வளரவிடாமல், ஓங்கி யடுத்து பிசாசுபோல் தானே எல்லா நீரையுமுண்டு வளர்ந்து வருகிறது. அப்படி வளரும் தூங்குமூஞ்சி மரத்திற்குப் பூவும் கிடையாது, காயும் கிடையாது, கனியும் கிடையாது. அதன் நிழலும், புளிய மரத்து நிழல்போல், வறட்சியைத் தான் கொடுக்கும். சுகாதாரத்திற்கும் கேடு. இப்படிப்பட்ட சர்க்கார் அதிகாரத்திற்கு நாம் சரீரத்தை ஒப்புவித்ததே ஓர் தீராத கடமை. அப்படியிருக்க, நாம் நம் மனதையும், ஆத்மாவையும் கூட இந்தப் பேயிடம் ஒப்புவிக்கவும் வேணுமோ? அதின் சொல்படி ஆடவும் பாடவும் வேணுமோ! அரசியல் பொருளாதாரம் இவைகளைத்தான் சட்டசபைக்குட்படுத்துவது அவசியமாய்ப் போய்விட்டது. ஏனென்றால், மானிட ஜன்மம் இன்னும் மிருகப் பிறப்பாய் இருந்துகொண்டு வருகிறது. நம்முடைய

சித்த விருத்தியையும், பரலோக சாதகத்தையும் சட்டசபைக்குட்படுத்தவும் வேணுமா? அப்படி நாம் உட்படுத்தி வந்தோமேயானல் பலஜாதி, பலமதங்கள் குடிபுகுந்து இந்தப் புண்ணியபூமி ரணகளமாய்ப் போய்விடாதா! உத்தமர்களை உத்தமர்கள் சண்டையிடும்படி நேரிடாதா? பிளவுகள் அதிகரிக்கும். சுயநலம் குடிகொள்ளும். தீமைகள் விளையும். நமது அடிமைத்தனம், இன்னும் ஆயிரம் வருஷம் சித்திக்கும்.

தவிர, அன்னிய நாட்டிற்கு ஜனநாயக முறையில் இந்தியா சொல்லிக்கொடுக்க வேண்டிய முக்கிய விஷயங்களில் இது ஒன்று. அதை நாமே கைவிடலாமா? எந்த சட்டசபைக்கும் அரசியல், பொருளாதார முறையில் (Political & Economic) ஆட்சி நடத்த அதிகாரம் உண்டு. ஆனல் பழக்க வழக்கங்களிலும், ஆசாரங்களிலும், மத விஷயங்களிலும், ஒரு சட்டசபைக்கும் எத்தனை 'ஓட்' மெஜாரிடி கிடைத்தாலும், சட்டதிட்டம் போட்டு சீர்திருத்தம் செய்ய அதிகாரமில்லை. பிரசாரம் செய்தே ஞானமார்க்கத்தில் கெடுதிகளை மாற்றவேணும். அந்த முக்கிய தர்மத்தை முதல் முதல் காங்கிரஸ் நமது தேசத்தில் நிலைநிறுத்த வேண்டும். இதற்குத் தொண்டும், பிரசாரமும், மிகவும் அவசியம். இல்லாவிட்டால் நமது நாட்டை விட்டு சாந்தம் குடியேறிவிடும். நமது நாகரீகம் அழிந்துபோய் விடும்.

முடிவில், சீர்திருத்தம் வேண்டுமென்றால் பிரசாரம் செய்வதுதான் வழி. ஆலயப் பிரவேச விஷயத்தில் உண்மையில் சட்டமிட ஒருவருக்கும் அதிகாரமில்லை. நமது தர்ம பிரகாரம் சட்டம் செல்லாது. அவசரச்சட்டம் வீண் அவசரம் தான். நான் சென்ற வாரம் சொன்னதுபோல் மான் ஓட்டம் புலி வாயிலே! குழப்பமும், பிளவும் அனுவசியமாய் அதிகரிக்கும். அடிமைத்தனம் செழிக்கும். சாந்தமும் ஒற்றுமையும் அழியும்.

கே. எஸ். வேங்கடரமணி.

---

## கட்டுரையாளருக்கு

நண்பர்கள் எழுதியனுப்பும் ஆராய்ச்சியுடன் கூடிய கட்டுரைகளும் ரஸமான கதைகளும் பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நமக்கு அனுப்பப்படும் விஷயதானங்கள் புள்ளி விவரங்களுக்கு சரியானவையாகவும் தகுந்த ஆதாரத்துடனும் இருக்க வேண்டும்.

தெளிவாக காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பும்படி நண்பர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கடிதங்கள் தமிழில் எழுதப்பட வேண்டும். கதை கட்டுரைகள் வேறு மூலங்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டால் அதைத் தெளிவாக முன்னதாகவே தெரிவித்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழரின் அறிவு வளர்ச்சிக்கான எந்த விஷயதானத்தையும் சந்தோஷத்துடன் வரவேற்கிறோம்.

# வார நடப்பு

1. மகாத்மா காந்தி கேட்டுக்கொண்டபடி, டிரான்ஸ்வாலிலுள்ள இந்தியர்கள் "இந்திய எதிர்ப்புச் சட்டத்தை" எதிர்க்க நடத்த எண்ணிய சத்தியாக்கிரகத்தை ஒத்திவைத்தனர். "மேலதிகாரிகளுடன் எவ்வித சச்சரவுகளின்றிச் சமாதானமாக ஓர் முடிவை யடையலாம் என்று நினைக்கிறேன்" என்று காந்தி கூறுகிறார்.

2. காங்கிரஸ் தலைவர் அரசியல் கைதிகளின் விஷயமாக குவாஜா நாஸிமுடீன் என்ற வங்காள மந்திரியைக்கண்டு பேசினார்.

3. சுபாஷ்போஸ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்வதன் பொருட்டுச் சத்தியாக்கிரகம் செய்யப் பதினாயிரம் தொண்டர்களைச் சேர்க்கப் போவதாகத் தெரிகிறது. இதற்கு வங்காள மாஜி மந்திரியான நாஷர் அலியும் ஒத்துக்கொண்டிருக்கின்றார்.

4. சமீபத்தில் நிஜாம் ராஜ்யத்தில் நடந்த ஹிந்து-முஸ்லீம் கலவரத்தின் பயனாக மூன்றுபேர்கள் இறந்தனர், பலர் காயமடைந்தனர்.

5. சென்னையில் நடந்த அன்னியர்கள் பதிவு விபரத்தில், ஐரோப்பியர்கள் சுமார் 1,174 என்றும், அமெரிக்கர்கள் சுமார் 339 பேர்கள் என்றும் காணப்படுகின்றன.

6. பம்பாய் இந்த மாதம் முதல்தேதியிலிருந்து உலர ஆரம்பித்துவிட்டது. 825 கள்ளுக்கடைகளில் 800 கடைகள் மூடப்பட்டன. சில்லரை விஷமங்கள் நடக்காவண்ணம் போலீஸ் பந்தோபஸ்து பலமாக இருக்கிறது.

7. ஆலயப்பிரவேசக் கூட்டங்களும் ஆலயப் பிரவேச எதிர்ப்புக் கூட்டங்களும் ஆங்காங்கு நடந்து வருகின்றன.

"ஹரிஜனங்களுக்கு முக்கியமாக வேண்டியது கல்வியும், கஷ்டமில்லா ஜீவனமுமேயன்றி ஆலயப் பிரவேசமல்ல," வென்று தஞ்சாவூரில் நடந்த சனாதனிகள் கூட்டமொன்றில் ஒரு சனாதனி கூறியிருக்கின்றார். அக்கூட்டத்திலிருந்த சனாதனிகள், ஹரிஜனங்களின்மேல் அவர்களுக்குள்ள அனுதாபத்தைக் காட்ட, அவர்கள்மேலே போட்டிருந்த மலையாளம் முண்டுகளை ஹரிஜனங்களுக்கு அளித்தனர் என்ற செய்தி பத்திரிகைகளில் அடிபட்டன.

இங்கிலாந்தில் ஐரிஷ்காரரால் விளைந்த பயங்கரக் குண்டு வீச்சின் பயனாக எட்டு நபர்கள் வெளியேற்றப்பட்டனர், பலர் நாட்டைவிட்டுச் சென்றனர்.

அமெரிக்காவுக்கும் ஜப்பானுக்கும் நடந்த வர்த்தக ஒப்பந்தம் முறிந்துவிட்டதைக் கேட்ட சைனாக்காரர்கள் சந்தோஷமடைந்தனர்.

இம் முறிந்துபோன ஒப்பந்தத்தால் நேர்ந்த நஷ்டத்தைத் தடுக்க ஜப்பான் ஜர்மனியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டது.

ரஷ்யா சைனாவுக்கு முப்பது லட்சம் பவுன் கடனாகக் கொடுக்கப்போகிறது என்று தெரியவருகின்றது.

இங்கிலாந்தும், பிரஞ்சும், ரஷ்யாவும் இன்னும் ஓர் முடிவுக்கு வரவில்லை. இவ்வாரம் இம்மூன்று நாடுகளின் சேனைத் தலைவர்களும் ஒன்றுகூடிப் பேசுவார்கள்.

பிரஞ்சு தேசத்தில் நடக்கவேண்டிய தேர்தலை, உலகம் இருக்கும் நிலைமையை உத்தேசித்து ஒத்திப் போட்டிருக்கிறது.

ஜர்மனியிலும், இத்தாலியிலும் யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் பலமாக நடந்துவருகின்றன. ஹிட்லர் ஸார் பிரதேசத்தை ஒருதரம் பார்வையிட்டார்.

ஸ்பெயினை மறுபடியும் பழைய அரசன் ஆளப்போவதாகத் தோன்றுகிறது. அரசனைக் கொண்டுவர முயற்சி செய்கின்றனர்.

சென்ற செவ்வாய் பம்பாயில் சொத்தின்மேல் போட்ட வரியை எதிர்க்க

முஸ்லீம்கள் ஓர் ஊர்வலம் நடத்திப் பின்பு நார்த் புரூக் தோட்டத்தில் ஓர் கூட்டம் போட்டார்கள். கூட்டம் நடக்கும்பொழுது சில காலிகள் போலீஸார்மீது கல்லெறிந்ததன் பயனாகப் போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். துப்பாக்கிப் பிரயோகத்தினால் சிலர் காயமடைந்தனர்.

அரசியல் கைதிகளை விடுவிக்கும் வண்ணம் வங்காளத்திற்குச் சென்ற ராஜேந்திர பிரஸாத் வெறுங்கையுடன் திரும்பினார்.

இலங்கைக்கு இனிமேல் வேலை தெரியாத் தொழிலாளர்களை ஏற்றுமதி செய்யக்கூடாது என்று உத்திரவு போடப் பட்டது.

வடக்கே கோமதி நதியில் வெள்ளம் பெருகிப் பல இடங்களை மூழ்க அடித்துவிட்டதென்ற செய்தி கிடைத்தது.

ஹங்கேரிக்கும் ருமேனியாவுக்கும் சிக்கல் ஏற்பட்டு இரண்டும் தனித்தனியே பிரிந்துவிட்டது. இரு தேசங்களின் எல்லையிலும் பெருத்த சண்டை நடப்பதாகக் கேள்வி.

---

"ஐதராபாத்துக்கு ஓர் நல்ல சீர்திருத்தம் கொண்டுவரவேண்டுமென்றால் அதைப் பாஷாவாரியாக மூன்று இராஜதானிகளாகப் பிரித்து, ஒவ்வொன்றும் சுயேச்சையாகவும், மத்திய சர்க்காரின் கீழுமிருந்தால் அவ்விராஜ்யம் ஓர் சிறிய பெட்ரேஷனாகும். இவ்விதம் இராஜ்ய விவகாரங்களைத் தீர்க்கலாமே யொழிய வேறு வழியில்லை.

பட்டாபி சீதாராமய்யா.

* * *

"நான் இறந்தபிறகு என்னுடைய சவத்தை, மாட்டு மந்தைகளும், ஆட்டுமந்தைகளும், பன்றிக்கூட்டங்களும், கோழிகளும், பலவித மீன்களும், பின்தொடர்ந்து 'மிருகங்களின் மாமிசத்தைத் தின்பதைவிடச் சாவதே மேல்' என்று சொன்னவரைக் கௌரவிக்கும்"

ஓர் சமயத்தில் இப்பெரியார் அசௌக்கியமாக இருந்த காலை, வைத்தியர்களும், சொந்தக்காரர்களும், இவரைப் பிராணிகளின் கொழுப்பிலிருந்து எடுத்த சாரத்தைச் சாப்பிடும்படி வற்புறுத்தியும் கேளாமல் "உயிரைக் கொன்று அதன் மாமிசத்தைத் தின்பதைவிடச் சாவதே மேல்.

பர்னாட்ஷா.

* * *

இந்தியா தன்னிடத்திலுள்ள தங்கத்தை ஏற்றுமதி செய்யும் வரையில், கொடுக்கல் வாங்கல் விஷயங்களில் கஷ்டப்படாமல் இருந்தது. ஆனால் அதனிடத்திலுள்ள தங்கம் வரவரக் குறைந்து போகவே கொடுக்கல் வாங்கலை எவ்விதம் நீடித்து நடத்தமுடியும்.

பிரிட்டிஷ் வர்த்தக சபை.

* * *

"எவனொருவன் தேச வீரனாகவும், உலகம் போற்றுபவனாகவும், எங்கு சென்றாலும், ஜயமுள்ளவனாகவும், ஒழுக்கமும் சத்தியமுமுள்ளவனாக, ஆக வேண்டுமென்று ஆசைப் படுகிறானோ, அவன் மதத்தையும், ஒழுக்கத்தையும், தேசீயத்தையும் ஒன்று சேர்க்கக் கூடாது.'!

ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார்.

யுத்த தளவாடங்களும், அதற்கு வேண்டிய வெடிமருந்து முதலிய சாதனங்களை உண்டாக்குவதையும், இந்தியாவிலுள்ள நதிகளையும் கால்வாய்களையும் ஒன்றுக்கொன்று சம்பந்தப்படுத்த வேண்டிய மராமத்து வேலைகளையும், இருந்து வருகின்ற பெரிய கைத்தொழில்களைத் தேசியப்படுத்துதலையும், சமஸ்தானங்களினால் ஏற்படுத்தவேண்டிய மற்றும்பல கைத்தொழில்களையும், டாக்டர் ஷாக்ட் கூறுகின்ற ரீதியில் நிதி விஷயமான பொருளாதாரத்தை மாற்றி அமைப்பதையும் சென்னைக் காங்கிரஸ் சர்க்கார் கைக்கொண்டால் இவ்விராஜதானியிலிருந்து வேலையில்லாத் திண்டாட்டம் அடியோடு ஒழிந்துவிடும்.

ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார்.

# என் பட்டணம் வந்தீர்கள்?

(வே. நாராயணன் எம். ஏ., எம். எல்.)

ஸ்ரீ காந்தி மஹாத்மாவும் அவர்களது சிடர்களும் 'கிராமத்துக்குப்போ' என்று விடாது உபதேசிக்கிறார்கள். தேசியப் பத்திரிகைகளும் 'கிராமத்துக்குப்போ' என்று பல்லவி பாடுகின்றன. ஆனால் சென்னைப் பட்டணத்துப் படே படே ஆசாமிகளெல்லாம் இவ்வூர் ஸ்தாபித்த மூன்றாம் நூற்றாண்டு நிறைவினைக் கொண்டாடுகிறார்கள். இவ்வரிய சந்தர்ப்பத்திலே பட்டிணத்திலுள்ளார் பலரையும் பேட்டி கண்டு அவர்கள் பேச்சைப் பாரத மணியிலே பிரசுரிக்கலாமே என்று எனக்குத் தோன்றியது. உடனே ஒரு வினாப் பத்திரிகையை அச்சிட்டு எடுத்துக் கொண்டு புறப்பட்டேன். முதன் முதலில் மயிலைக் கபாலீச்சுர மமர்ந்த பிரானைத் தரிசித்தேன். "தேவரீர் சென்னை மயிலாப்பூரிலே அமர்ந்து கோயில் கொண்ட காரணம் யாதோ?" என்று செந்தமிழிலேப யபவ்வியமாய் வினவி நின்றேன்.

"எங்கும் பலி தேடித் திரிந்து எனக்கும் அலுப்பு; என் விடைக்கும் அலுப்பு. 'கெட்டும் பட்டணம் சேர்' என்ற முதுமொழி ஞாபகத்திற்கு வந்தது. என்னையும் ஸ்தாணுவாக்கிக் கொண்டு என் தேவியையும் ஸ்தாவரமான ஒரு கற்பக வல்லியாக்கிக்கொண்டு இப்பட்டணத்திலேயே அமர்ந்தேன். என்னைச் சார்ந்தோர் வந்தாலும் சரி, என் மைத்துனன் ஹரியைச் சார்ந்த ஜனங்கள் வந்தாலும் சரி, நான் இந்த இடத்தை விட்டுப்போக மாட்டேன்," என்று ஆற அமர்ந்து விடை கூறினார்.

அடுத்தாப்போல், அவர் பக்கத்திலிருந்த வாயிலா நயினாரை வினவினேன். அவருக்கு உலகத்தாரைக் கண்டாலே நடுக்கம். என்னைப் பார்த்தாலோ அசல் பத்திரிகைக்காரன் போலத் தோன்றிற்று. அதனாலோ, என்னவோ, அவர் ஸ்தாணுவாக அமர்ந்த பிரானையே மனதிற் கொண்டவராய் மௌனம் சாதித்து விட்டார்.

அங்கிருந்து திருவள்ளுவ நாயனார் கோயிலுக்குப் போனேன். 'என் பட்டணத்திலே வசிக்கிறீர்' என்றேன், சற்று மெதுவான குரலிலே. அவருடைய தாடியையும் மீசையையும் பார்த்தால் பயமாக இருந்தது. 'எங்கு என்னைச் சபித்துவிடுவாரோ?' என்று.

பெற்றோர் பெற்றுவிட்ட பட்டணத்தின்
மற்றோரிடங் காண்டலரிது [பெற்றிபோல்

என்ற குறள் என் காதிலே விழுந்தது.

பெரியாரை வணங்கி விடைபெற்று மயிலைத் திருவல்லிக்கேணியாரைக் காணச் சென்றேன்.

என்னை அன்புடன் வரவேற்று, "நான் இங்கே வந்துறைந்த காரணத்தை என் தொண்டன் திருமங்கை மன்னன் பாடியிருக்கிறானே! உனக்குத் தெரியாதா. சற்று உற்றுக்கேள்" என்றார். ஸந்நிதியின் கோஷ்டி கூட பிரபந்தம் ஸேவித்துக் கொண்டிருந்தார்கள்.

மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும்
மாடமாளிகையும் மண்டபமும்
தென்னன் தொண்டையர் கோன்செய்த நன்
மயிலைத் திருவல்லிக்கேணி நின்றானை
கன்னி நன்மாட மங்கையர் தலைவன்
காமரு சீர்க்கலிகன்றி
சொன்ன சொன்மாலை பத்துடன் வல்லார்
சுகமினி தாள்வர் வானுலகே.

என்னும் கோஷம் நின்றதும், பார்த்தஸாரதிப் பெருமாளை நோக்கி, "தொண்டை நாட்டு அரசன் பொழிலும் வாபியும் மதிளும் மாளிகையும் மாடமும் மண்டபமும் இங்கே செய்யக் காரணமென்னவோ" என்றேன். அது கேட்டு அவர் அருகிலிருந்த அனுமாருக்

குக் கண் ஜாடை காட்டினர். அனுமார் "வாரீர், பத்திரிகை நிருபரே! உமக்கு விடை அந்த மங்கை மன்னனே கூறிப் போந்தார் காணும், "ஒப்பவரில்லா மாதர் கள்வாழும் மயிலைத் திருவல்லிக்கேணி" என்றும் 'தேனமர்சோலை மாடமா மயிலைத் திருவல்லிக்கேணி' என்றும் 'இரவியின் கதிர் கன்றுழைதல் செய் தறியாத் திருவல்லிக்கேணி' என்றும் சிலாகிக்கத்தக்க சோலை யழகையும் மாத ரழகையும் கண்டு பாரத யுத்தத்திலே பாணங்களால் வடுப்பட்ட பெருமாள், 'இங்கேயே கோயில் கட்டுவாய்' என்று தென்னனை ஏவி ஆட்கொண்டார் காணும்" என்றார்.

கோட்டையுள்ளே மாதாகோவில் முற் றத்திலே அடக்கஞ் செய்யப்பெற்ற ஆதி ஆங்கிலேய வியாபாரிகளின் ஆன்மாக்கள் என் கண்முன் தோன்றின.

"ஏது, இப்படிக் கூவம் நதியைப் புனித மாக்கி கோட்டையும் கோவிலும் கட்டி வாழ்ந்தீர்கள்?" என்று அஞ்சாது கேட் டேன்.

"தானம் கொடுத்த (குதிரையின்) மாட்டின்பல்லைப் பிடித்துப் பார்ப்பதா? கடற்கரையோரத்திலே கோட்டை கட்டி வாழ இடம் கேட்டோம்; கூவம்நதியின் சங்கமத்திலுள்ள மணல்மேட்டை தந் தார்கள். ஆனல் அதுவும் நன்றாயிற்று. இங்கே பிரஞ்சுக்காரன் போட்டியில்லை. ஹைதர் அலிகூட இங்கே வரமுடிய வில்லை. கப்பல்கள் தங்குவதற்கு வேண் டிய சௌகரியங்கள் இல்லாதது ஒரு குறையாகத்தானிருந்தது. அதையும் ஒருவாறு நிவர்த்தித்துக் கொண்டோம். இப்பொழுதும் எங்களுக்கு இங்கு விட்டுச்செல்ல மனமில்லை. என்னசுகமான கீழ்காற்று? நீயும் சற்று இளைப்பாறிப் போகலாமே? என்றன. மஹாயுத்தத் திலே மரித்த வீரர்களின் ஞாபகார்த்த மாகக் கட்டிய மண்டபத்திலே சற்று அமர்ந்தேன்.

பிறகு நாழிகையாயிற்று என்று அவசர அவசரமாய்ப் புறப்பட்டேன், சென்னை கேசவப் பெருமாளைக்காண.

"ஹைதர் கலாபம் என்று கேள்விப் பட்டிருக்கிறாயா? அப்பொழுது, "இங்கேயுள்ள ஆங்கிலேயருக்குப் பயந்து அவன் இங்கே வரமாட்டேன், இதுதான் புகலிடம்" என்று என் அடியார்கள் திருநீர்மலையிலிருந்து என்னைத் தூக் கிக்கொண்டு வந்து இங்கே விட்டுவிட் டார்கள். இதுதான் நான் இங்கே வந்து சேர்ந்த விவரம்" என்று பெருமாள் கோவிலிலிருந்து ஒரு வாக்குப் பிறந்தது. அருகிலுள்ள கந்தசாமி கோயிலுக்குப் போகுமுன்,

"தருமமிகு சென்னையிற் கந்த
கோட்டத்துள் வளர்தலமோங்கு கந்தவேளே!
தண்முகத்துய்யமணி யுண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே"

என்று ஒரு கிராமபோன் பாடிற்று. 'குமாரக் கடவுளைப்போய்க் காணவேண் டாம்; இப்பாட்டுத்தான் விடை கூறி விட்டதே, தருமமிகுந்ததால் நான் இங்கு ஓங்கி வளர்கிறேன்' என்று கந்த சாமிக் கடவுளே இராமலிங்க சுவாமிகள் மூலமாய்ச் சொல்லிவிட்டாரே," என்று நான் வீடுதிரும்பும்போது. ஆஹா, என்ன அதிசயம்! தென் இந்தியாவி லுள்ள எல்லாத் தேவர்களும்—விநாயகர் கள், சிவமூர்த்திகள், விட்டுணுக்கள், தேவியர், முருகப்பிரான் எல்லைத் தெய் வங்கள் எல்லோரும் கோட்டையை நோக்கி விரைவதைக் கண்டேன்.' ஏக காலத்திலே எல்லாரும் இங்கே எழுந் தருளுவதேன்? என்று சற்று யோசித் தேன்.

"சட்ட சபையில் ஆலயப் பிரவேச ஸம்மதி ஸம்ரக்ஷண மசோதா விவாதிக்கப் போகிறார்களாம். வானொலி மூலம் பரப்பினல் இங்கே இந்த வெற்றி மண்ட பத்திலே நெருக்கியடித்துக்கொண்டு நம் முடையகதி யென்னவாகுமென்று பார்க்கவேண்டும்" என்று அவசரமாய்ச் சென்றார்களோ, அல்லது ஹரிஜனப் பிர வேசங்களுக்குப் பயந்து கவர்னர் மூல மாய் சர்வ சக்தராய் மாட்சிமை பொருந் திய நமது இந்தியச் சக்கரவர்த்திக்கே சரணம் என்று தெரிவிக்கச் சென்றார் களோ, யார் கண்டார்கள்?

# அவன் வருகை

(ஸ்ரீ. ர. ஷண்முகசுந்தரம்)

கிழக்கு வானத்தின் ரத்தச் சிவப்பானது
குழந்தை கன்னத்தின் செஞ்சந்தன நிறம் பெறும்போது
அவன் வருகிறான்.
நிலவினால் நெஞ்சு செய்து அதன்மேலே
நெருப்பைப் பூசியதைப் போன்றிருக்கும்
அவன் யாரோ?
பிரசன்ன வதனத்துடன் தம்
விடியற்கால நட்சத்திரத்தை
தரிசிக்க வரும் இவன்
எங்கிருந்து வருகிறான்?
அமைதியிற் குளித்த அதிகாலையிலே
அவனிடமிருந்துதான் அழகு வெளிச்சம் அடிக்கிறதோ?
மின்னலிலிருந்து பிறந்த குமிழி போன்ற கண்களை
உயர்த்தி அவன் உற்று நோக்கும்போது
ஏடுகளில் படித்ததெல்லாம் எனக்கு ஞாபகம்
வந்து அலை மோதுகிறது.
ஆகாயம் முழுவதும், ஆழ்ந்த நிலவில்
மயங்கிக் கிடப்பதைப்போலவே இவன்
பிரகிருதியின் சௌந்தர்யத்தில்
மூழ்கி விடுகிறான்.
இவனுடைய ஆழங்காணமுடியாத மௌன பிரார்த்தனையின்
நோக்கந்தான் என்னவோ?

# ஞாபகப்பூ

("ரஸிகன்")

சாமந்திப் பூவை கண்டால் எனக்கு இன்றைக்கும் நாளைக்கும் யாதொரு காரணமுமில்லாமல் மனதில் வேதனை உண்டாகிறது. அந்தப் பூவைக் கையிலெடுத்து அதன் மெல்லிய அடர்ந்த இதழ்களைக் கொத்துக்|கொத்தாய்ப் பிய்த்து, அழுத்தமாயும் கைக்கு வெல்வெட்டுப்போல் அமுங்கிக் கொடுக்கும் அதன் தண்டில் நகங்களைப் பாய்ச்சி மகரந்தங்கள் செய்வதற்கு நேர்விபரீதமானவேலையைத் தான் செய்வதற்கு வழக்கமாய் வருகிறது. நிறங்களிலே மஞ்சள் மட்டமென்றாய், மஞ்சள் பூக்களுக்குள்ளே சாமந்தியே கேவலமானதென்றும் மனதில் எனக்கு வெகுநாளாய் அழுந்தின கொள்கை. ஆனால் அது தகுந்த காரணங்களைக் கொண்டதல்ல. பூவரசம்பூ நல்ல மஞ்சள் தான். அப்படியிருந்தும் அது நன்றாய் விகசிக்கும் காலத்தில் அளவில்லா ஆனந்தத்தைக் கொடுக்கும். சுருள் தங்கம் போன்ற அதன் இதழ்களும், தங்கக் கோப்பையில் விலையுயர்ந்த பர்மாக் செம்பு வைத்தாப்போல் அதற்குள் அடியில் காணப்படும் ரக்தச் சிவப்பும் அந்தச் சிவப்பின் நடுவிலிருந்து மகா விஷ்ணுவின் நாபியிலிருந்துண்டாகும் தாமரைத் தண்டுபோல் கிளம்பும் மெல்லிய பூப்பொடியடர்ந்த தண்டும் கண்ட மாத்திரத்தில் மனதைக் கவரவில்லையா? தாமரைப் பூவையே நோக்குவோம். அதன் இதழ்கள் கைக்கு சொற சொறப்பாயும், உற்று நோக்கில் அதிகப் பகட்டில்லாத நிறத்தோடும் இருப்பதும் தவிர, முற்றிலும் மணமற்றதாயிருக்கின்றன. எனினும் தாமரையின் தோற்றம் என்ன கம்பீரம்! அசைவற்ற நீரில் அதன் இளங்காந்தி பிரதிபலிப்பதைப் பார்த்த கண்களுக்கு வேறு எந்தக் காக்ஷி திருப்திதரும்? சம்பங்கிப் பூவையும் மஞ்சள் புஷ்பவர்க்கங்களில் ஒருவாறு சேர்க்கலாம். இளம் பச்சை கலந்த மஞ்சள். பூவும் ஆகாரத்தில் சிறியதுதான். ஆனால் என்ன வாசனை! நீரேறின அதன் இதழ்களின் அழுத்தமும், தேவலோகத்துச் சிற்பி செதுக்கினாற் போன்ற அதன் வேலைப்பாடும் இந்தச் சிறிய பூவுக்குத் தனியான அந்தஸ்தைக் கொடுக்கிறது.

இப்படி சாமந்திப்பூவை அவமதிப்பது அனியாயமென்று எனக்கு அடிக்கடி மனதில் பட்டாலும் அதனிடத்திலுள்ள வெறுப்பை மாற்ற முடியவில்லை. அதற்குக் காரணம், மேற்கூறிய பூவரசம்பூ, தாமரைப்பூ, சம்பங்கிப்பூ முதலானதுகளைத் தமக்குரிய மரத்திலும், செடியிலும், கொடியிலும் அவைகள் மொட்டிட்டு, பூத்துப் பிரகாசிப்பதை என் சொந்த ஊராகிய குக்கிராமத்தில் எனக்கு ஞாபகம் தோன்றின நாளாய்ப் பார்த்தது, சந்தோஷித்திருந்தேன். சாமந்திப் பூவையோ, முதல் முதல் பார்த்து, செடியிலல்ல, கொடியிலல்ல. அனேக காலத்தழுக்கேறின பழந்துணி போட்டு மூடின மூங்கில் தட்டில் வைத்து வீதியில் விலை கூறிக்கொண்டு போகும் கிழவிகள் கையில்தான் நான் அவைகளை முதலில் கண்டேன். அந்தப் பூக்கள் வாடி, இதழ்கள் சுருண்டும் கலகலத்தும் இருந்தன. காலணாவுக்கு 20 பூவென்று வெகு நேரம் கூடைக்காரியோடு தர்க்கம் பண்ணி என் சித்தி வாங்கினாள். பூ காசுகொடுத்து வாங்குவதே எனக்கு விசித்திரமாயிருந்தது. அதிலும் இந்த வதகின பூவை வாங்குவது பெருத்த அசட்டுத்தனம் என்று தோன்றிற்று. இப்படியிருக்க, பூவை வாங்கினதோடில்லாமல், பள்ளிக்கூடம்போக அவசரப்படும் என்னைத் தலை பின்னிக்கொண்டு போகவேணுமென்று கட்டாயப்படுத்தி, சாமந்திப் பூவையும் வைத்து ஜடைபோட்டு விட்டாள்.

எனக்கு வந்த துக்கத்திற்கும் கோபத்திற்கும் எல்லையில்லை. ஆனால் அதை வெளியிட்டால் அடிவிழும். என்னை அலங்கரித்ததாக வல்லவோ என் சித்தி எண்ணினாள். பள்ளிக்கூடத்துக்கு நாழியாகி விட்டது. ஆத்திரமும் வெட்கமும் மாறிமாறித்தாக்க பள்ளிக்கூடம் போயச் சேர்ந்தேன். அது 'க்ராப்பு' என்ற நாகரிகச் சின்னம் ஏற்படாதகாலம். என் வயதுப் பிள்ளைகள் என்னைப்போலவே பெரும்பாலும் தலை பின்னிக்கொண்டும் சிலர் பூ வைத்துக்கொண்டும் வருவார்கள். ஜடைபோட்டுக் கொள்வதும், பூ வைத்துக் கொள்வதும் ஆண்பிள்ளைகளுக்கு அகௌரவம் என்று எண்ணின எனக்கு அப்படி வருபவர்களைக் கண்டால் கொஞ்சம் அலக்ஷியம்தான். அப்படியிருக்க, நானே இந்த அலங்கோலத்தில் வரக்கண்ட பையன்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு பரிஹாசம் செய்ய ஆரம்பித்தார்கள். 'அடே, தேவடியா ஜடை போட்டிருக்கு, பாரடா,' என்றான் ஒருவன். மற்றொருவன் மெல்லப் பின்னாலே வந்து ஒரு பூவிலிருந்து ஒரு கொத்து இதழ்களைப் பிடுங்கினான். இதைக்கண்ட மற்றவர்கள் எல்லோரும் தலைக்கு கொஞ்சமாய் ஒரு நிமிஷத்தில் பூ முழுவதும் பிய்த்து விட்டார்கள். அதோடு நின்றிருந்தால் எனக்கு அதிக வருத்த மிருந்திருக்காது. அந்தப் போக்கிரிப்பயல்களோ பிய்த்த இதழ்களை ஒருங்கே என் தலையிலும் முகத்திலும் கழுத்திலும் அர்ச்சனை பண்ண ஆரம்பித்து விட்டார்கள். நான் ஒண்டி, எப்படித்தடுப்பது? வீட்டிலிருந்து ஓடிவந்த வேகத்தில் வியர்வை கிளம்பியிருந்ததால் இந்த இதழ்கள் விழுந்த யிடங்களிலெல்லாம் ஒட்டிக் கொண்டன. அந்த சமயம் எங்கள் உபாத்தியாயர் வகுப்பில் நுழைந்தார். அவரைக் கண்டதும் பையன்கள் பூனைபோல் பதுங்கிவிட்டார்கள். அவர் வெகு நல்லவர். அதிக வயதாகவில்லை. சமீபத்தில் மூத்த தாரம் தவறிப்போய் மறுமணம் புரிந்தவர். நான் கையெல்லாம் சிரங்கு வந்து கிளிகொத்தும் காலத்தில் அவிழ்ந்த தலைமயிரைக் கட்டவொண்ணாமல் கஷ்டப்படுவதைக்கண்டு அவரே அடிக்கடி கட்டியிருக்கிறார். நடந்ததை அரை நொடியில் தெரிந்துகொண்டு, என் முகத்தையும், கழுத்தையும் துடைத்து, 'அவன்கள் கிடக்கிறான்கள், அயோக்கியப்பயல்கள், ஏதாவது விஷமம் பண்ணினால் என்னிடம் சொல்லு, துலைத்து விடுகிறேன்,' என்று என்னைத் தேர்த்தி, அவர்களைக் கண்டிப்பதற்கும், என்னை தைரியப்படுத்துவதற்கும் என்னை வகுப்பில் முதலிடத்திற்குப் போகச் சொன்னார். இதில் ஒருவாறு சந்தோஷம் ஏற்பட்டாலும், பையன்கள் பண்ணின சேஷ்டை மறக்க முடியவில்லை. அதிலிருந்து என் சித்தியிடம் குரோதமும், சாமந்திப் பூவில் வெறுப்பும் என்னுள்ளத்தில் குடிகொள்ள ஆரம்பித்தன.

நான் சாமந்திப்பூவின் மேல் கொண்ட கோபத்திற்கு இன்னொரு காரணமும் உண்டு. எங்கள் தெருவில் ஒரு பிராசீன தேவாலயம் எங்கள் வீட்டிற் கருகாமையில் இருந்தது. விஜயதசமி அன்று ஒட்டை மண்டபத்தில் அம்புபோட எழுந்தருளும் 18 மூர்த்திகளுள் எங்கள் அகத்தீசுரரும் ஒருவர். அந்த மகோன்னதமான தெய்வ கோஷ்டியிலும் கூட அவர் இரண்டு கிழ மாடுகள் கட்டின சப்பரத்தில் ஏற்றப்பட்டதும், யாளிமுகமும் அர்த்த சந்திரனும் வைத்தலங்கரிக்கப்பட்ட மகரத்தோடு கூடினதுமான பழுக்காய்ச்சட்ட விமானத்தில் பிரத்தியேகமாய் விளங்குவதை யாரும் கவனிக்காமல் இருக்க முடியாது. இந்த விசேஷ தினத்தைத் தவிர இதர நாள்களிலும் அவர் பவனி வருவதுண்டு. அப்படி யுலாவுவது அனேகமாய் எங்கள் தெருவின் எல்லைக்குள்ளேயே. அப்படியிருந்தும் அர்த்த ராத்திரிக்கு முன் கிளம்புவதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு நேரம் கழித்து வருகிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு தங்களுக்கு மகிமை அதிகம் என்ற எண்ணம் கலியாணச் சாப்பாட்டுக்கு நாம் வருந்தி யழைக்கும் விருந்தாளிகளிடத்தில் வெகுசாய் நாம் எல்லோரும்

கண்டிருக்கிறோம். அந்த குணம் நமது தேவஸ்தானங்களின் உற்சவ அமுலைத் தழுவியே தலைமுறை தத்துவமாக நம் சமூகத்தில் வந்திருக்கிறதென்று ஊகிக்கலாம். இது நிற்க. சுவாமி நடு நிசிக்கு வெளிக்கிளம்பும் வரையில் சிறு பையன் கண்விழித்திருக்க முடியுமா? ஆனால் எனக்குத் தூங்க மனம் வராது. (அதற்குக்காரணம் ஆஸ்தான மேளக்காரனுடைய அபஸ்வரம் நிறைந்த வாசிப்பில் மோகமோ, கோயில் தேவடியாள் அரிதாரம் அரைகுறையாய்ப் பூசி, முகம் வெளுத்தும், கால் பிறந்த மேனிக்குக் கருத்தும், அபிநயம் பிடிக்கும் அழகைப் பார்ப்பதில் ஆனந்தமோ இல்லை. நிஜபக்திதான், காரணம், ஆனால்,—ஏதாவதொரு சமயம் பின்னால் வரும் ஸ்வஸ்திவாசன கோஷ்டியை உபசரிப்பவர்கள் சுண்டலும் நீர்மோரும் பானகமும் வழங்குவதுண்டு.) இதைக்கண்டு என் பாட்டி சுவாமி வந்ததும் கட்டாயம் எழுப்புகிறேன், தூங்கு, என்று சொல்லுவாள். அவள் வார்த்தையில் பூர்ண நம்பிக்கையுடன் உறங்குவேன். இரண்டு தூக்கம் போட்ட பிறகு சுவாமி வருவார், பாட்டி தட்டி எழுப்புவாள். அச்சமயம் பரிபூரண சமாதி கலைந்து எழுந்திருக்க சற்றும் மனமில்லாமல் பக்கம் திரும்பிப் படுத்துக்கொள்வேன். பாட்டி, 'ஐயோ பாவம்! குழந்தை அசர்ந்து தூங்குகிறது' என்று சும்மாயிருந்து விடுவாள். ஆனால் சித்தப்பா சம்மதியார். வாசல்திண்ணையில் படுத்துக்கொள்ளும் அவர் சரசரவென்று வீட்டிற்குள்வந்து என்னைப் பிடித்து இரண்டாட்டம் ஆட்டி அரை விழிப்பாய்க் கண்ணைப் பிசைந்து கொண்டிருக்கும் என் கையில் தேங்காய் வெற்றிலை பாக்கு சூடம் முதலான தீபாராதனை திரவியங்களிட்ட தட்டை அமுக்கி வெளியில் இழுத்துச் செல்வார். என் ஆன்மா உய்யும்பொருட்டு இவ்வளவு பாடுபட்டாரோ என்று சந்தேகிக்க வேண்டாம். தன்காலில் மண்படாமலிருக்க வேண்டித்தான். வாசலில் அதற்குள் சுவாமி எதிரே வந்ததும், வெகு ஆர்ப்பாட்டத்தோடு மணியக்காரன் அவை யடக்கம்பண்ணி வாகனத்தை நிறுத்துவான். 'காஸ்லைட்'டுகளின் வெறுப்பான காந்தி கண்ணைக்கூச, மத்தாப்பூக்களின் நெடி மூக்கையறுக்க, கூட்டத்தில் இடிபட்டு, தீவட்டி எண்ணெய்ச் சுடர் காலில் சுரீரென்றுவிழ தட்டித் தடுமாறி, வாகனத்தின்முன் சென்று நிற்பேன். குருக்கள் தட்டை வாங்கி தேங்காயைக் கையரிவாளால் ஒரு தட்டுத்தட்டி உடைத்து, சூடத்தைக் கொளுத்தி தீபாராதனையை ஒரு நொடியில் முடித்து ஒரு மூடி தேங்காயையும், கொஞ்சம் வில்வம் கலந்த விபூதியையும், குங்குமத்தையும் குனிந்து எட்டி என்னிடம் கொடுப்பார். அதற்குள் நன்றாய் விழித்துக்கொண்டு சுவாமியை உற்று நோக்கும் ஆவலுடன், நான் கட்டைவிரலில் எம்பிப் பார்ப்பேன். சுவாமியின் உருவம் சுத்தமாய்த் தெரியாது. எங்கே பார்த்தாலும் சாமந்திப்பூ, அதுதான் புஷ்பங்களில் நிரம்ப மலிவானது—தாண்டாவும், ஹாரமும், மாலையும், உதிரியுமாய் படிச்சட்டத்தையும், பிரபையையும், சுவாமி சாய்ந்திருக்கும் திண்டையும், துணி சார்த்தப்பட்டு ஏராளமாய்ப் பருத்திருக்கும் அவர் துடைகளையும் மறைத்துக்கொண்டிருக்க, பொன் நிறம் வாய்ந்த அவர் முகம் எட்டடிக்குக் கீழே நிற்கும் மூன்றடி உயரமுள்ள எனக்கு எப்படிக் கண்ணில் படும்? சுவாமியைப் பார்க்காமல் சாமந்திப்பூவைப் பார்ப்பதற்கா இவ்வளவுபாடு என்று முணுமுணுத்துக் கொண்டு, வீடுசேர்ந்து காலை யலம்பிப் படுத்துக்கொள்வேன். அப்புறம் தூக்கம் அனுகூலபடி பிரசித்திபெற்ற அந்த ஊர் கொசுக்கள்என் சரீரத்தை 'காண்டிராக்டு' எடுத்துவிடும். சாமந்திப்பூவைக் கண்டால் வெறுப்பு ஏன் வராது, சொல்லுங்கள்.

---

# ஒடிந்த கை

எழுதினவர்
கே. எஸ். வேங்கடரமணி

மொழி பெயர்த்தவர்
கு. ப. ராஜகோபாலன்.

இந்திய சிவில் சர்விஸ் உத்தியோகஸ்தனாகவோ அல்லது குறைந்த பக்ஷம், பணத்தை வாரிக்கட்டும் பிரபல வக்கீலாகவோ வாழ்க்கையை வெகு விமரிசையாக நடத்தலாம் என்பது ஒரு சமயம் கிருஷ்ணசாமியின் கனவு. எஸ். எஸ். எல். ஸி. வகுப்பில் ஐந்து கிருஷ்ணசாமிகள். ஆனால் எஸ். டி. தான் அவர்களுக்குள்ளே சுலபமாக முதலில் நின்றவன். திருச்சியில் ஹைஸ்கூல் வகுப்புகளில் ஒவ்வொரு வருஷமும் அவன் தான் முதல் பையன். ஆனால் என்ன சனியனோ, காலேஜ் வந்ததும் திடீரென்று அவனுடைய படிப்பு வேகத்துக்கு ஒரு தடை ஏற்பட்டது.

பெண்சாதி கிடைப்பது அதிருஷ்டப்படி இருக்கிறது என்று சொல்லுவார்கள்; ஆனால் கிருஷணசாமி விஷயத்தில் பெண்சாதியினால் அதிருஷ்டம் மாறிற்று. அதை மூலையிலேயே கருக அடித்து விட்டது கலியாணம். கலியாணத்தில் காசி யாத்திரையில், மஞ்சள் பூசிய ஒரு மங்கையின் மெல்லிய கையைப் பிடித்துக் கொண்டு நடந்த அன்று முதலே அவனுக்கு ஒரு விபரீதமான முடக்கம் ஏற்பட்டது. படிப்பிலிருந்து போராவல் பளிச்சென்று குறைந்தது. அவனுடைய பிள்ளை மனத்து வேகமும் வளர்ச்சியும் சட்டென்று மாறிற்று. அவனுடைய ஊக்கம் சிதறிவிட்டது. எதனால் இந்த ஏக்கமும் தயக்கமும்? ஒருபுதிய உணர்ச்சியின் எதிர்ப்பு சக்தியா? நிச்சயமாக சிறிது காலம்கழித்து ஏற்பட இருந்த ஒரு அதிசய ஆனந்தத்தின் வேட்கையா?— ஏது இப்படி அவனை மயக்கத்தில் ஆழ்த்திற்று?

இல்லை. கலியாணம் என்ற கேலிக்கூத்து அவனுக்குக் களிப்பூட்டவில்லை. சொல்லப்போனால் தீப்பந்தத்தைக்கண்டு மிரளும் புலிபோல அவன் கலியாணத்தைக்கண்டு அஞ்சினான். அவனுக்குப் பெண் என்றாலே ஒரு வெறுப்பு உண்டு. பிறவியிலேயே, தலைமுறை தத்துவமாக, வந்தவொரு உணர்ச்சி அது.

இண்டர்மீடியட் பரிட்சையில் கிட்டு தேறவில்லை; அதற்குக் காரணம் அவன் அமைப்பில் அப்பொழுது ஏற்பட்ட விபரீத மாறுதல் ஒன்று; மற்றொன்று அந்த வருஷம் திருச்சியில் "பிளாங்கி"கள் ஜாஸ்தி. கிட்டு ரோஷக்காரன்; அதற்கு முன் அவன் பரிட்சையில் தேறாமல் இருந்ததே கிடையாது. அவனுக்குச் சீ என்று போய்விட்டது. புஸ்தகங்களையும், பாதிராத்திரி வரையில் படிப்பதற்காக சாப்பிட்ட மருந்தின் காலி சீஸாக்களையும் விற்று ரயில் சார்ஜ் சேகரித்துக் கொண்டு அகண்ட காவேரிக் கரையிலிருந்த தன் சொந்த கிராமமாகிய பரமதிக்குப் போய்ச் சேர்ந்தான்.

இனிமேல் மனித சங்கமே இல்லாமல் இயற்கை யொன்றில் மட்டும் ஈடுபட்டு வாழ்வது என்று தீர்மானம் செய்தான்; அதேமாதிரியே இருந்தான். ஆனால் தன் வயது சென்ற பாட்டியை மட்டும் அவன் விடவில்லை.

அவ்வளவு வயதான பிறகும் குன்றாத செயற் சக்திகொண்ட அவளுடைய அரும் கடமையே அவனுக்கு ஒருமின்சார ஊசியாக இருந்தது. சேஷியினுடைய அசாதாரணமான திறமையையும் நாட்டுப் பெண்களைப் பழக்கி லகான்போட்டு நடத்துவதற்கென்றே பிறந்தவள் போன்ற அவள் சாமர்த்தியத்தையும் யார் புகழாமல் இருக்கமுடியும? தாமரை மொக்கு போல அழகும் தூய்மையும் வாய்ந்த கமலம் அவனுடன் வாழ்க்கை நடத்தி

வந்த பொழுது அவளும் சேஷியின் ஏகாதிபத்திய ஆட்சியின்கீழ் ஒரு பிரஜையாக வந்து சேர்ந்தாள். அவ்வளவுதான். தொன்றுதொட்டு ஏற்பட்ட ஒரு வாழ்க்கை திட்டத்தின் கீழ் ஒரு குடும்பத்தில் ஒரு சமையல்காரிக்கு இருக்கும் வேலையை அடிமைபோல செய்து வந்தாள்.

கலியாணமானவுடன் ஒரு மாதத்திற்குள்ளேயே அவளுடைய தாயார் தகப்பனார் இருவரும் இறந்து போனார்கள். இதனால் கமலத்தின் சங்கடங்கள் அதிகமாயின. அது முதல் சேஷி கமலத்தை ஒரு சாக்குருவியென்று கருத ஆரம்பித்தாள். கிட்டுவோ கலியாணமே மனிதன் முட்டாள் சந்ததியை அபிவிருத்தி செய்யச் செய்திருக்கும் சூழ்ச்சியென்று கருதுபவன். அவன் அபிப்பிராயத்தில் இந்த விஷயத்தில் விலங்கினமே (மனிதன் உள்பட) ஒரு பெருத்த முட்டாள்தனத்தைச் செய்திருக்கிறது; மரஞ்செடிகள் தான் இந்த விஷயத்தில் அழகாக அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. சேஷி கிட்டுவின் அபிப்பிராயத்தை மனப்பூர்வமாக ஆதரித்தாள்.

இந்தமாதிரியாகக் கிட்டு தன் அழகிய கிராமத்தில் இரண்டு வருஷங்களை ஒரு விதமான பயனுமின்றிக் கழித்தான். கமலம் பாட்டிற்கு சேஷியின் நாக்கு கொடுத்த சாட்டையின் கீழ் சமையலறை அடிமையாகக் காலங்கழித்தாள்.

அப்பொழுது தான் நாட்டில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி ஏற்பட்டது. காங்கிரஸின் கிளர்ச்சியின் பலனாக இந்திய சர்க்கார் பொதுஜனக் கல்வியின் அவசியத்தைப்பற்றி யோசிக்கலானார்கள். எல்லா மாகாண சர்க்கார்களையும் அவர்கள் ஒரு அழகிய அறிக்கை மூலம் தட்டியெழுப்பினார்கள்; அவர்கள் முறையே தாலூகா போர்டுகளைத் தட்டி எழுப்பினார்கள்.

தாலூகா போர்டுகள் அதுவரையிலும் ரோட்டு ரிப்பேர் வேலை ஒன்றில் தான் மும்மரமாக ஈடுபட்டிருந்தன. தாலூகா போர்டு பிரஸிடெண்டு, அங்கத்தினர்களின் மாமன் மச்சினர்கள், பந்துமித்திரர்கள் கண்டிராக்டர்களாக வேலை செய்தால் என்றாவது ரோட்டுகள் ரிப்பேராகி முடியுமா?

ரோட்டு ரிப்பேரை விட்டுவிட்டு கிராமப் பையன்களை 'ரிப்பேர்' செய்யும்படி அவர்கள் உத்தரவிடப் பட்டார்கள். உடனே அவர்கள் அந்த வேலையிலும் வெகு ஊக்கத்துடன் ஈடுபட்டார்கள்.

கிட்டு இருந்த இலாசா தாலூகா போர்டு 36 கிராமங்களில் புதிய பிரதம பாடசாலைகள் ஆரம்பிப்பதாகத் தீர்மானித்தது. காவேரி வெள்ளம்போல் திடீரென்று வந்த கிராண்டுகளை அவற்றில் திருப்பிவிடத் தீர்மானித்தது. பரமதி அந்தக் கிராமங்களில் ஒன்று.

கிட்டுவுக்கு குழந்தைகள் ஏற்படவில்லை. கமலம் காலத்தை உழைத்தே கழித்தாள். பிள்ளையில்லாத பலர்போல கிட்டுவுக்கும் பிள்ளைகளிடத்தில் பிரியம் கிடையாது; ஆனால் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் வாத்தியார் தொழிலில் மட்டும் அவனுக்கு மோகம் உண்டு. அந்தக் காலத்தில் குழந்தைகளுக்கும் குறைவே கிடையாது. கர்ப்பத்தடை பிரசாரமோ ஆசாரமோ அவ்வளவு ஊக்கமான பிரச்னை ஆகவில்லை அப்பொழுது.

பிள்ளையில்லாதவர்களை இரண்டு கூட்டப் பாகப் பிரிக்கலாம்; குழந்தைகளிடத்தில் பாசம் கொண்டவர்கள்; துர்முகிகள், முதல் கோஷ்டியினருக்குக் குழந்தையைக் கண்டாலே ஆனந்தம் உண்டாகும். அவர்களைத் தொட்டுப் பழகினால் அவர்களுடைய ஏங்கிய ஹிருதயங்களுக்கு ஒரு ஆறுதல் ஏற்படும். இரண்டாம் கோஷ்டியினர் குழந்தைகளைக் கண்டாலே சரிப்பார்கள். ஜட்கா வண்டிக்காரன் புதுக் குதிரையைத் தாக்குவதுபோல அவர்கள் குழந்தைகளைத் தாக்குவதிலேயே திருப்தி கொள்ளுபவர்களாக இருப்பார்கள். கிட்டு இரண்டாவது கோஷ்டியைச் சேர்ந்தவன். அவனைச்சொல்லி என்ன பயன்; அவன்மேல் குற்றமில்லை. இயற்கைக்குப் பல மாதிரிகளை உற்பத்தி செய்வதில்தான் உற்சாகம்! அல்லவா?

மாதம் பன்னிரண்டு ரூபாய் சம்பளத்தில் கிட்டு பரமதி பிரதம பாடசாலை உபாத்தியாயராக நியமிக்கப்பட்டான். பையில் புது ரூபாய்கள் பளிச்சென்று தென்படப் போகின்றன என்று உத்சாகம் கொஞ்சகாலம் அவனுடைய ஹிருதயத்தை ஈரமுள்ளதாக ஆக்கிற்று. கொஞ்சகாலம் நிரம்ப சிரத்தையுடனேயே பள்ளிக்கூடத்தை நடத்தினன். பிறகு அதை ஒரு கடமையாக்கி விட்டான். நாளுக்குநாள் பையன்களிடம் அதிக கொடுமையுடன் நடந்துகொள்ள ஆரம்பித்தான். மூன்று வருஷகாலம் இப்படி நடந்தது.

பிறகு பள்ளிக்கூடம் போவதில்கூட அவனுக்குச் சிரத்தைகுறைந்தது. ஆனல் அவனுடைய யதேச்சாதிகாரத்திற்கும் தொழிலிலிருந்த வெறுப்பிற்கும் அடையாளமாக அவனுடைய பிரம்புமட்டும் மேஜைமேல் நாள் முழுவதும் கிடக்கும்.

அவனுடைய காலடிச் சத்தத்தைக் கேட்டாலே குழந்தைகள் இளந்தளிர்கள் போல நடுங்கினர்கள். பெற்றோர்களுக்குத் தெரியுமா? தெரியும், ஆனல் அவர்கள் அதைக் கவனிக்கவில்லை, வழக்கம் என்று இருந்துவிட்டார்கள், எல்லோரும் சந்தோஷமாக இருந்தார்கள். குழந்தைகள் வீட்டில் தொந்தரவு கொடுக்காமல் பள்ளிக் கூடத்தில் விஷமம் செய்யாமல் அடங்கிக் கிடக்கிறர்கள் என்று பெற்றோர்களுக்கே நிம்மதி, சந்தோஷம்.

(தொடரும்)

---

ஸ்ரீ. எம். ரத்தினசாமி அவர்கள் ராஜமகேந்திரத்தின் சர்க்கார் கலாசாலையில் செய்த உபந்நியாசத்தில் அடியில் கண்டவாறு தற்கால படிப்பின் தன்மையைப் பற்றிப் பேசி இருக்கிறர்

தான் பப்ளிக் ஸர்விஸ் கமிஷனின் அங்கத்தினர் முறையில் சந்தித்த மாணுக்கர்கள் தனக்குத் திருப்திகரமாகவில்லை என்றும், அவர்களால் சாதாரண கேள்விகளுக்கும் சரியான விடைகள் அளிக்க முடியவில்லை என்றும் கூறியிருக்கிறர். அவர்கள் அடிக்கடி அளிக்கும் விடை என்னவென்றல், "அது என் புஸ்தகத்தில் இல்லை. அது நான் படித்த படிப்பைச் சேர்ந்ததல்ல," என்பவை தான். "தற்கால மாணுக்கர்கள் புஸ்தகங்களுக்கு அடிமையாய்விட்டார்கள். புஸ்தகங்கள் மட்டும் தான் அவர்களுக்கு ஞானமூலம். அதனல் அவர்கள் படிப்பு மிகவும் அற்பமாகவும் குறைவுபட்டதாகவுமிருக்கிறது," என்றும் கூறியிருக்கிறர்.

தற்காலத்தில் கீழ்ப்பட்ட வகுப்புகள் முதற்கொண்டு ஆண் பெண் மாணுக்கர்களுக்கு ஏக கல்வியில் மட்டும் பயிற்சி செய்விப்பது அவர்கள் வித்தையை அற்பமாக்கி விடுகிறது என்றும், தன் நாளில் பீ.ஏ. வகுப்புக்கு வந்த பிறகு தான் ஏக சாஸ்திரப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது என்றும் கூறினர். "புஸ்தகங்களை மட்டும் ஆராய்தல், ஒரே கல்வியில் தொடர்தல் இவைகள்தான் சிறுவர்களுக்குப் பெரும் பொது நோக்கான கல்வியில்லாமல்செய்துவிட்டது" என்றும், "சரித்திரம் வாசிக்கும் மாணுக்கர்களுக்கு ஸயின்ஸ் தெரிகிறதில்லை. ஸயின்ஸ் படிக்கிறவனுக்குக் கொஞ்சம் கூட சரித்திர பயிற்சி கிடையாது. மாணுக்கரின் மனதை விசாலப்படுத்தவும் ஞானப் பெருக்கை உண்டாக்கவும் உபயோகமில்லாத அப்படிப்பட்ட கல்வியினல் என்ன பிரயோஜனம்? தற்காலச் சிறுவர்கள் அரைப் படிப்புப் படித்தவர்களேயாவார்கள்.

"மேல் நாட்டிலிருக்கும் ஆக்ஸ்போர்ட்டு கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலைகளில், படிப்பு, பொது வாசம், கல்வி எல்லாம் சேர்ந்து அமைக்கப்பட்டிருக்கின்றன" என்றும் கூறினர்.

---

# "மாருதி"யில் என் கட்டுரை

(வி. ஆர். சுந்தரராமன், எம். ஏ.)

பள்ளிக்கூடத்தில் என்னமோ நான் வெகு சாமர்த்தியசாலி என்றுதான் பெயரெடுத்தேன். படிப்பில் வெகு துடி. பரீக்ஷைகள் ஒவ்வொன்றிலும் கைநிறையத்தான் மார்க்குகளை அள்ளினேன். இதற்காக எனக்குச் சில பதக்கங்களும் பரிசுப் புத்தகங்களும் கூடக் கிடைத்திருக்கின்றன. எங்களூரில் உள்ள சிறு பள்ளிக்கூடத்தை விட்டுச் சென்னையில் ஒரு பிரபலமான காலேஜில் சேர்ந்து படிக்கும் பொழுதுங்கூட இப்படியே இதே மார்க்குகள், பரிசுப் புத்தகங்கள். இருவிடங்களிலும் பேசுவதிற்கூட நான் ஒருகை பார்த்து அதிலும் நிபுணன் என்றே பெயரெடுத்தேன்.

காலேஜை விட்டு வெளியேறி வாழ்க்கையில் அமர்ந்த பிறகும் எனக்கு இந்தப் பெயரே. நான் வேலை பார்த்து வந்த ஆபீஸிலும் கெட்டிக்காரன் என்று தான் என்னை மதித்தார்கள்.

ஆனல் இவ்வளவெல்லா மிருந்துமென்ன? என் வீட்டினுள் காலடிவைத்தேனே இல்லையோ, எனக்குக் கிடைப்பதெல்லாம் வெறும் அசட்டுப் பட்டமே. ஆனல், அந்த நாளிலும் வீட்டிற்குள் மட்டும் எனக்கு இந்தப் பெயர் இருந்துதான் வந்தது என்பதை நான் ரகசியமாக ஒப்புக்கொள்ள வேண்டியதுதான். ஏனெனில், கடைக்குப் போனல் எனக்குச் சரிவர பேரம் பேசி காய்கறி வாங்கத் தெரியாதென்பது எல்லோருடைய அபிப்பிராயம். இந்தக் காரியத்தில் என் மருமானும் வயதில் எனக்கு ஒத்தவனுமான கிட்டு "யமப்பயல்" என்று பெயரெடுத்து விட்டான். ஆனல் பள்ளிக்கூடத்தில் அவன் வாங்கிய கோளங்களை வீட்டில் யார் கவனித்தார்கள்? என் பாட்டி மாத்திரம் என்னைக் குறித்து, "எது எப்படிப்போனலென்ன. நம்ம ராமுவோடே படிப்பு ஒண்ணே போருமே" என்று சில சமயங்களில் புகழ்ந்தது ஒரு பக்கம் எனக்குச் சற்று ஆறுதலளித்தது.

இப்போதோவெனில் வீட்டில் எனக்குச் சதா அசட்டுப் பட்டம் கட்டுவதில் முனைந்திருப்பவள் என் மனைவி பட்டு தான். அவள் என்னை மணந்து எங்கள் வீட்டிற்கு வந்து என்னுடன் வாழ்க்கையைத் தொடங்குகையில் அவளுடைய இனத்திற்கேற்ப என்னிடம் அவளுக்கு நிரம்ப பயந்தான். என்னருகில் உட்கார மாட்டாள், உரக்கப் பேசமாட்டாள், பிறரறியாமல் என்னேடு தனித்துப் பேசுவதிலும் அவளுக்குப் பயமும் லஜ்ஜையுமே. அப்பாடா! எங்கே போயிற்று? இப்பொழுது இவ்வளவு அடக்கமும் பயமும்? இந்த பயம் நாளடைவில் துணிச்சலாய் மாறிக் கடைசியில் ஓர்வித அதிகார தோரணையாக முடிந்தது எப்படியென்று எனக்கே தெரியவில்லை. இப்பொழுதெல்லாம் அவள் என்னுடைய சாமர்த்தியத்தைக் குறை கூறுவது சர்வ சாதாரணமாய்ப் போய்விட்டது. நான் எதைத்தான் செய்யட்டுமே. அதில் ஒரு தவறுதல் அவளுக்குப் புலப்படாமலிருக்காது. கறிகாய் வாங்குவது முதல் ஆபீஸுக்குப் போவதற்காக உடையணிதல் உள்பட என்னுடைய செயல்கள் ஒவ்வொன்றிலும் அவள் காண்பது குறையே.

பட்டு என்னை ஓர் அசடாக மதிப்பது என் வீட்டுமட்டும் நிற்காமல் வீட்டிற்கு வெளியிலேயும் பரவ ஆரம்பித்தது. வீட்டிற்குள்ளேயும் எனக்கு இப்பட்டம் சூட்டுவதை எங்களுக்குள்ளேயே வைத்துக்கொள்ளாமல் அவள் குழந்தைகட்கெதிரிலும் என்னை அவமதிப்பது எனக்குப் பிடிக்கவில்லைதான். உங்கள் குழந்தைகளிடம் உங்களைக் குறித்து உங்கள் மனையாள் "அசட்டு அப்பா" வென்றால் உங்களுக்கு எப்படித் தானிருக்கும்,

ஸ்வாமி? அதுதான் போகட்டும், வீட்டுக்குள்ளேயே தானே இருக்கிறது விஷயம் என்று நான் ஒருவாறு என்னைச் சமாதானப்படுத்திக் கொண்டிருக்கையில் ஒருநாள் அவள் தன் சினேகிதி அம்புலுவிடம் பேசிக் கொண்டிருப்பது அருகிலிருந்த என் காதில் விழுந்தது. என்னைக் குறித்துப் பேசுகையில் அவள் "இது இருக்கே," என்றாளோ இல்லையோ, எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஆனால் அம்புலுவானவள் இதற்குக் கொஞ்சமும் சளைக்காதவளாய்த் தன்னுடைய புருஷனைக் குறித்து "எங் காத்துப் பிச்சு" என்ற போதுதான் போனவுயிரைத் திரும்பவும் அடைந்தவனாய், "சரிதான், இந்த வர்க்கத்திற்கே இது ஒரு குணம் போலிருக்கிறது" என்று சொல்லி என்னை ஒருவாறு தேற்றிக்கொண்டேன். அதுவும் தன் கணவனிடம் அபாரப் பிரியம் உடையவள் என்று பட்டு பலதரம் புகழ்ந்திருக்கும் அம்புலுதானே இவள்!

எல்லா விஷயத்தையும்விட பத்திரிகைக்குக் கட்டுரை எழுதுவதைப் பற்றிப் பட்டு என்னை இடித்துக் கூறுவதுதான் என்னை அதிகமாய்ப் புண்படுத்திக் கொண்டு வந்தது.

"என்ன படிப்பு இருந்தாலென்ன. எம். ஏ. யாம் என்னமோ எம். ஏ. பத்திரிகைக்கு நல்லதா ஒரு கதை எழுதத் தெரியாதா? பொம்மனாட்டிகள் கூட இந்த நாள்ளே எத்தனையோ பேர் ரஸ ரஸமா எழுதரா," என்று கேலி செய்வாள்.

"நீ எழுதுகிறதுதானே? நீயும் அவாளெப்போலே ஒரு பொம்மனாட்டியில்லியோ?" என்று தப்பித் தவறி கேட்டு விட்டேனோ, வந்துவிடும் ஆக்கிரோஷத்துடன் அடியிற் கண்ட பதில்:—

"ஆமாம், ஆயிரக்கணக்கா ரூபாயைக் கொட்டி ஓங்களெப்போல நான் எம். ஏ. படிச்சேனா என்ன?"

நியாயம் எப்படி?

ஆகையால் இச்சிறு விஷயத்திலாவது என் சாமர்த்தியத்தை அவள் முன்னிலையில் நிலைநாட்டுவதென்று உள்ளுக்குள் ஒரு சபதம் செய்துகொண்டேன். அதாவது பத்திரிகைக்கு உடனே ஒரு கட்டுரை எழுதுவதென்றுதான். காலேஜிலிருக்கையிலும் காலேஜை விட்ட பிறகும் ஆங்கிலத்தில் பத்திரிகைகளுக்கு நான் கட்டுரைகள் சில எழுதியிருக்கிறேன். அவைகளுள் ஒன்றிரண்டிற்குத் தக்க சன்மானமும் அளித்திருக்கிறார்கள். ஏன்? தமிழிலுங்கூட தொடர்ந்து இரண்டு வருஷங்கட்கு ஒரு வாரப் பத்திரிகைக்கு விஞ்ஞானக் கட்டுரைகள் எழுதி அவைகளின் மூலம் இருநூறு ரூபாய்கள் பெற்றிருக்கிறேன். இது பட்டுவுக்கும் தெரியும். ஆனால் இதெல்லாம் அவளுக்கு ஒரு லக்ஷியமா? கட்டுரை யெழுதுவதென்றால் அவளுடைய அபிப்பிராயத்தில் "மாருதி" யில் 'காமா சோமா' வென்றுவது ஒரு சிறு கதை எழுதுவதுதான்.

எனவே "மாருதி"க்குக் கட்டுரை எழுதுவதில் வெகு மும்முரமாக ஈடுபட்டேன். எனக்குத் தெரிந்த கைச்சரக்குகளையெல்லாம் திரட்டியுருட்டிக் கதைகளாகவும் ஹாஸ்யக் கட்டுரைகளாகவும் கற்பனை செய்தேன். என்ன செய்துமென்ன? அப்பாழும் "மாருதி"யின் ஆசிரியர் ஸ்ரீமான் கி. ரா. வுக்கு நான் எழுதிய விஷயங்கள் ரஸிக்க வில்லை போலும்! தவறாமல் நான் அனுப்பிய கட்டுரைகள் ஒவ்வொன்றும் மறு தபாலிலேயே திரும்பி வந்தவண்ணமா யிருந்தன. வீட்டிற் கிடைத்த அசட்டுப்பட்டம் போதாதென்று ஒரு இளம் பத்திரிகாசிரியரும் இப்பட்டத்தைச் சூட்டியது தான் நான் அடைந்த பலன். ஆனால் என் நண்பர் ஒருவர் இதே பத்திரிகையைக் குறித்து பாவம், என்னைப்போலவே அவரும் தள்ளப்பட்ட கட்டுரைகளை எழுதியவர்போலும்!—சில சமயங்களில், "அது ரொம்ப மோசம், சார். அந்தச் சிறு பயல் கி. ரா. (இந்த மனுஷன் உத்தியோகத் திலிருந்து விலகியஒரு பென்ஷன் பேர்வழி) அப்பத்திரிகைக்கு ஆசிரியனாக வந்தது முதல் அவன் சினேகம் இருக்கிறவர்கட்குத் தான் அதில்

இடம் உண்டு, சார் "என்று சொல்லி யிருந்தது எனக்கு ஒருவாறு ஆறுதல ளித்தது. இருந்தாலும் இந்தக் கி. ரா. வின் கர்வத்தை அடக்குவதற்காகவாவது ஒரு கட்டுரையை இப் பத்திரிகையில் எப்படியாவது பிரசுரிக்கச்செய்து விடுவ தென்று உறுதிகொண்டேன்.

ஸ்ரீமான் கி. ரா. என்பவன் "மாருதி" யின் ஆசிரியராவதற்குமுன்பு வேறு பத்தி ரிகைகளுக்கு விஷயங்கள் எழுதிக் கொண் டிருந்தது எனக்குத் தெரியும். ஏன்? என்னுடைய விஞ்ஞானக் கட்டுரைகள்பிர சுரிக்கப்பட்டுவந்த வாரப் பத்திரிகை யிலேயே இவனுடைய சிறு கதைகளும் சில வந்ததுண்டு. அப்படியிருக்கையில் இப்பொழுது மட்டும் என் கட்டுரை களில் என்ன ருசி குறைந்து விட்டது?

எப்படியும் அவனுடைய கர்வத்திற்கு ஒரு பங்கம் விளைவிக்க வேண்டுமென்ற வேலையில் முனைந்துவிட்டேனுகையால் ஒரு புதிய யுக்தியைக் கையாளத் தீர் மானித்தேன். மும்முரமாய் உட்கார்ந்து ஒரு கட்டுரையை ஜோடித்தேன். அடுத்த தபாலிலேயே அதை "மாருதிக்கு" அனுப்பி வைத்தேன்.

ஆனல் இம்முறை இக் கட்டுரை மட் டும் வெளிவந்திருந்தால் அது எனக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்திருக் கும். அது வழக்கம்போல் திருப்பி யனுப் பப்பட வேண்டுமென்றே கோரினேன். கட்டுரையும் என்னை ஏமாற்றுமல் திரும்பி வந்தது. உடனே ஒரே குதூகல மடைந்தவனுய்ப் பேனவையும் மைக்கூட் டையும் தேடி யெடுத்துப் பின்வரும் கடி தத்தை யெழுதினேன்:—

'மாருதி'யின் ஆசிரியர் ஸ்ரீமான் கி. ரா. அவர்கட்கு—

"தாங்கள் கடைசியாக நான் அனுப்பி யிருந்த கட்டுரையையும் வழக்கம்போல் மறு தபாலிலேயே திருப்பியனுப்பி கௌரவித்ததற்கு மிகவும் வந்தனம். உண்மையில் நீங்கள் இக் கட்டுரையைப் பிரசுரித்திருந்தால் கூட என்னுடைய அன்பிற்கு இவ்வளவு பாத்திரமாக மாட் டீர்கள். ஏனென்றுல் அடியிற் கண்டவற் றைச் சற்றுப் படியும்!

"நான்கு வருஷங்கட்கு முன்பு 1935-ம் வருஷம் பங்குனி மாதத்திய 'மாருதி' இதழின் பக்கங்களைக் கொஞ் சம் புரட்டிப் பாருங்கள். 32-ம் பக்கத் தில் 'அடிதடி' என்று வெளியாகி யிருக் கிறதே. அக்கதையைச் சற்றுக் கவனிக்க வும். அதில் கோவிந்தராஜு முதலியார் என்னும் கதா நாயகனை வீராசாமி செட் டியாராக மாற்றும். அவருடைய மனைவி பருவதத்தம்மாளுக்குப் பங்கஜவல்லி என்று பெயரிடும். இன்னும் அதில் வரும் ராகவலு, கேசவன், நெட் டையன் என்பவர்களை முறையே முருகன், கோவிந்தன், காத்தான் என்று மாற்றிச் சொல்லும். இவர் களுடைய ஊரான பூதூரும் பழையூரா கட்டும். கட்டுரையின் தலைப்பைக் கூடச் சற்று தலைமாற்றிப் போடுமே. இப்பொ ழுது உம்மால் கடைசியாகத் தள்ளப் பட்ட 'தடியடி', என்னும் என்னுடைய கதை என்னுடையதுதானு அல்லது 'மாருதி'யில் அடிக்கடி எழுதிவரும் உம் முடைய நண்பர் 'விமலன்' என்பவரு டையதா என்பதைக் கவனியுங்கள்."

இக் கடிதத்திற்குப் பின்னுரையாக அடியிற் குறித்திருப்பதைச்சேர்த்தேன். "தாங்கள் அங்கீகரிக்காமல் திருப்பி யனுப்பியிருக்கும் கட்டுரைகளுள் முதல் மூன்று பத்திரிகைகளில் வெளிவந் திருப்பது மட்டுமன்றி அவ்வவ் விதழ்க ளில் மேலட்டையில் விசேஷக் கட்டுரை களாகவும் குறிக்கப்பட்டிருப்பதை நீங் கள் கவனித்திருப்பீர்களென்று நம்புகி றேன்."

இக்கடிதம்போய்ச் சேர்ந்ததோ, இல் லையோ, சமீபத்தில் திருப்பியனுப்பப் பட்டதனுல் வேறு பத்திரிகைகளில் அதுவரையில் வெளிவராமலிருந்த மூன்று கதைகள் ஒரு ஆள்மூலம் கேட்டு வாங்கப்பட்டுதொடர்ந்தாப்போல் "மாரு தியில்" பிரசுரிக்கப் பட்டன.

(595-ம் பக்கம் பார்க்க)

# குப்பு தீக்ஷிதர்

(ஆர். பங்காருஸ்வாமி பி. ஏ. பி. எல்.)

குப்பு தீக்ஷிதருக்கு வயது நாற்பது அல்லது நாற்பத்தைந்து இருக்கலாம். நல்ல கட்டுவாய்ந்த சரீரம். பூசணிக்காய் போன்ற தொந்தி. புன்முறுவல் பூத்த முகம். உடம்பெல்லாம் பட்டை பட்டையாய் விபூதி. கார்முகில் காந்தி.

வைதீகம், ஜோஸ்யம், வைத்தியம் இவைகளில் அவருக்குப் பழக்கம் உண்டு. "கிளையண்டில்" அவருக்கு ஏராளம். ஆனால் ப'ப் பண்ணப்பட்டவர்களின் தொகை 'மட்டும் அதிகமல்ல, மேலும் எல்லா பிஸினஸ்' மாதிரி தீக்ஷிதரின் 'பிஸினஸிலும்' 'ஸ்லம்பு' தீக்ஷிதருக்கோ ஸம்ஸாரம் பெரிது. பெண் பிள்ளை, பேரன், பேத்தி எல்லாம் சேர்த்து குஞ்சும் குளுவானுமாய் சுமார் முப்பது உருப்படிகள் உண்டு. வருஷம் தப்பினாலும் தீக்ஷிதரின் ஸஹதர்மபத்னிக்குக் கர்ப்பம் தப்பாது. கர்ப்பமும் பூர்ணம்தான். சிசுவும் பெண்தான். தீக்ஷிதர் என்னதான் விழுந்து விழுந்து சம்பாத்தியம் செய்தாலும் அவருடைய ஸம்ஸாரமாகிற ஸாகரத்தில் அது பெருங்காயத்தை கரைத்ததற்கு ஒப்பாக இருந்தது. பாவம்! என் செய்வார்? சாக்ஷி சொல்லி சம்பாத்தியம் செய்யலாமா என்று யோசித்தார். ஆனால் பாபம் வருமேயென்று கிலேசித்தார். குடும்ப ரக்ஷணார்த்தமாகச் செய்கிற காரியங்களுக்கு அவ்வளவு பாபம் கிடையாது, புண்ணியம் கூடக் கிடைத்தாலும் கிடைக்கலாம், எதற்கும் தைரியமாக ஒரு துறையில் இறங்கவேண்டுமென்று மனதைத் தேற்றிக்கொண்டார். குப்பு தீக்ஷிதருக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. இராமய்யர் கிருஷ்ணய்யரிடம் வாய்மொழியாய் ஐம்பது ரூபாய் கொடுத்திருந்தார். இராமய்யர் பல தடவை துடர்ந்து கேட்டுவந்ததில் தருவதாக ஒப்புக்கொண்டு புகல் சொல்லி நாள் கடத்திவந்தார்; இராமய்யர் கிருஷ்ணய்யர் பேரில் வியாச்சியம் தொடுத்தார் கிருஷ்ணய்யர் தொகை, செலுத்தியாய் விட்டது என்றுகூறிக் கக்ஷி செய்தார். தீக்ஷிதர் வாதி பக்கம் சாக்ஷி.

கோர்ட்டில் வாதியை விசாரித்தபின் டபேதார் ஸப்ருல்லாகான் குப்பு தீக்ஷிதரின் பெயரை நீட்டி மடக்கிப் பல்லால் தட்டி இழுத்து கு...ப்...பு...தீட்ச...ர் என்று இருமுறை கூவினன். தீக்ஷிதர் ருத்திராக்ஷதாரியாய் விபூதி மேனியராய் சாக்ஷிக் கூண்டில் குதித்து ஏறிக் கை கூப்பி நமஸ்கரித்துப் பின் கைகட்டி சத்தியமே ஒரு கரிய வுருவெடுத்து வெண்ணீறு பூசி வந்ததுபோல் நின்றார்.

கோர்ட்டு கிளார்க் குப்பு தீக்ஷிதரைப் பார்த்து, 'நான் சொல்லுகிறபடி சொல்லும்......ஸர்வ வல்லமை யுள்ள தெய்வத்தின்முன்......'

குப்புதீக்ஷிதர்:—(வினயத்துடன்) கோர்ட்டாரவாள், கிளார்க்வாள் பூராச் சொல்லவில்லை. ஸாக்ஷாத் பரமேச்வரன் ஸர்வ வல்லமையுள்ளவன் மட்டும்தான. ஸர்வக்ஞன், ஸர்வ வியாபி, அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகன், ஸர்வ மங்கள ஸ்வரூபி......

ஜட்ஜ்:-(கோபத்துடன்). என்ன ஓய். அதிகப் பிரசங்கியாய் உளறுகிறீர். வாயை அடக்கிப் பேசும்.

குப்பு தீக்ஷிதர்:—(சாந்தமாய்) அப்படியே, ஸர்வ வல்லமையுள்ள தெய்வத்தின் முன்......

கோர்ட்டு கிளார்க்:—......நான் சொல்லுவதெல்லாம் ஸத்தியம். ஸத்தியம் தவிர வேறில்லை.

குப்பு தீக்ஷிதர்:-நான் சொல்லுவதெல்லாம் ஸத்தியம். ஸத்தியமேதவிர வேறில்லை.

கோர்ட்டு கிளார்க். உம்முடைய பெயர் என்ன.

குப்பு தீக்ஷிதர் :—கோபித்துக்கொள்ள வேண்டாம். பெயர்னுத் தெரியல்லே, முழுப்பெயரா.........பட்டப் பெயரா...புனைபெயரா.

கோர்ட்டு கிளார்க்கு (கோபத்துடன்) ஒவ்வொன்ருய் சொல்லித் தொலேயும்.

குப்பு தீக்ஷிதர்:-(கம்பீரத்துடன்)சாஸ்திர ரகித தர்க்க வியாகர்ண, ஸங்கித ஜோஸ்ய வீர்ய தைரிய பிரதாப ருத்திர தீக்ஷிதர் குமாரர் அலங்கார பூஷித ஆரூட மாந்திரீகவல்லப குப்பு தீக்ஷிதர். 'குப்பண்ணு' என்றும் சொல்லுவார்கள்.' 'குர்' என்ற புனை பெயரும் சூடியுள்ளேன்.

கோர்ட் கிளார்க்:—வயசு ?

குப்பு தீக்ஷிதர்:-நான் பிறந்தது யுவ வருஷம் மார்கழிமீ 18வ. ஜன்ம லக்னம் தனுஸு இம்மட்டுந்தானே. கணக்குப் பார்த்துக்குங்கோ.

கோர்ட்டு கிளார்க்:—(கோபத்துடன்) நீர் வயசு சொல்லமாட்டீர்.

குப்புதீக்ஷிதர்:—இதோ சொல்லி விடுகிறேன். 49 வருஷம் 10 மீ 24 நாள். அது என்னத்துக்கு—ஐம்பது வயதுக்கு 36 நாள் இருக்கிறது என்று எடுத்துக் கொள்ளுங்கள்.

கோர்ட்டு கிளார்க் :—என்ன தொழில் ?

குப்பு தீக்ஷிதர்:—ஏதோ உபாய ஜீவனம்.

வாதிவக்கீல்:— குப்பு தீக்ஷிதர்வாள், இந்த நிம்பர்வாதி பிரதிவாதிகளைத் தெரியுமா?

குப்பு தீக்ஷிதர் :— அதென்ன அப்படி மெள்ளக் கேட்கிறீர்கள். நன்னுத் தெரியும். இராமய்யர். சாமிஅய்யர் குமாரர். சாமி அய்யர்ன்னு லேசா. பெரியக் ஞாதா. நாக்கசைந்தால் நாடசையும். கிருஷ்ணய்யர் கோபாலய்யருடைய கனிஷ்ட குமாரர். கோபாலய்யர் நல்ல யோக்யர். ஸுந்தர புருஷர்.

வாதி வக்கீல் :— ஓய்! நான் கேட்கிறதற்கு மட்டும் பதில் சொல்லும். வாதி இராமய்யரிடம் கிருஷ்ணய்யர் கடன் வாங்கியிருந்தாரா ?

குப்புதீக்ஷிதர் :— ஆமாம். கைமாத்து வாங்கியிருந்தார்.

வாதிவக்கீல் :— எவ்வளவு ?

குப்புதீக்ஷிதர் :—(யோசித்து) அவ்வளவு இவ்வளவு என்ன? தலையைக் கொண்டு போகிற காரியம் ஒன்றுமில்லே. ஆயிரமா ஐநூரா-பத்து ஐம்பது வாங்கியிருந்தார்.

வாதிவக்கீல் :— பத்தா ஐம்பதா ?

குப்புதீக்ஷிதர் :— ஸ்வாமி! அதற்குள்ளே குதர்க்கம். ஐம்பது ரூபாய் அதற்குத் தான் பத்து ஐம்பது என்று சாதாரணமாய்ச் சொல்லுகிறது!

வாதிவக்கீல் :—கிருஷ்ணய்யர் அந்தத் தொகையைத் திரும்பக்கொடுத்தாரா?

குப்புதீக்ஷிதர் :—இதென்ன கேள்வி! கிருஷ்ணய்யர் ஸம்ஸாரி. ரூபான்னு லேசா ஆப்பட்ரதா.

வாதிவக்கீல் :—தரேன்னு சொன்னுரா ?

குப்புதீக்ஷிதர் :—ஆமாம் ஸ்வாமி ஆமாம். (பிரதிவாதி வக்கீல் எழுந்திருந்து குப்புதீக்ஷிதரை குறுக்குக் கேள்வி கேட்டார்.)

பிரதிவாதிவக்கீல் :—குப்புதீக்ஷிதர்வாள் நீங்கள் இராமய்யர் கிருஷ்ணய்யரிடம் தொகை கொடுக்கும்போதுகூட இருந்தீரோ ?

குப்புதீக்ஷிதர் :—நான் எப்படி இருக்க முடியும். என் சம்சாரப்பாடு எவ்வளவோ. நான்கூட இல்லே.

பிரதிவாதி வக்கீல் :—கேள்விப் பேச்சுத் தானே?

குப்புதீக்ஷிதர் :—ஆமாம்.

பிரதிவாதி வக்கீல் :—கிருஷ்ணய்யர் யோக்யர்.

குப்புதீக்ஷிதர் :—ரொம்ப—

பிரதிவாதி வக்கீல்:—தொகையைத் திரும்பக் கொடுத்திருக்கலாம்.

குப்புதீக்ஷிதர் :—பேஷா இருக்கலாம்.

பிரதிவாதி வக்கீல் :—(இடத்தில் அமர்ந்தார்.)

வாதிவக்கீல் :—எழுந்திருந்து "ஒய் தீக்ஷிதர் நான் கேட்டதற்கு தரேன்னு ஒப்புக்கொண்டதாகச் சொன்னீரே"

குப்புதீக்ஷிதர் :—அதுக்கப்புறம் கொடுத்திருக்கப்படாதா. ரூபாய்கொடுக்க எத்தனை நிமிஷம் செல்லும்.

இராமய்யர் பல்லைக்கடித்தார், 'பலே பேர்வழி!" என்றார் இராமய்யர் வக்கீல் 'பழம் பெருச்சாளி' என்றான் டலாயத்.

தீக்ஷிதர் ஒன்றையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. "பத்தும் பத்தும் இருபது ரூபாய் சம்பாதிக்க வேண்டுமென்றால் நாலுபேர் நாலு சொல்லத்தான் செய்வார்கள்" என்றுஎண்ணினார். இருந்தாலும் முதல்தரம் சாக்ஷிசொல்ல வரும் போது இரண்டு பக்கத்துக்கும் அனுகூலமாய் ஜோடித்துச் சொல்வது கொஞ்சம் கஷ்டம்தான். அன்று முதல் குப்பு தீக்ஷிதருக்கு சாக்ஷி தீக்ஷிதர் என்ற பெயரும் கிடைத்தது.

---

(592-ம் பக்கத் தொடர்ச்சி)

"மாருதி"யில் என் கட்டுரைகளைப் பார்த்தவுடன் என் மனைவி "அட, பிராம்மணா பத்திரிகைக்குக் கதை எழுத சாமர்த்தியத்தை எப்பொழுது சம்பாதித்தேள்?" எங்கிட்ட ஒண்ணுமே சொல்லவேயில்லையே? என்று எனக்கு ஒரு "ஸர்டிபிகேட்" கொடுத்தாள். அத்துடன் நிற்காமல் மேலும், "சரி, 'மாருதி' ஆபீஸிலேருந்து வந்திருக்கும் 'செக்கு'க்கு என்ன புடவை வாங்கப்போறேள்?" என்றாள்!

---

# மைசூரில் கிராமப் புனருத்தாரணம்.

மைசூர் சர்க்காரின் பிரதம அங்கத்தினர், சித்தல்டிரக் ஜில்லா மகா நாட்டில் பேசும் பொழுது, — ரூ 38,000, மைசூர் சர்க்கார் வருகிற வருஷத்தில், கிராமத் தொழில்களுக்காகவும், தோல் பதனிடுவதற்காகவும், முட்டை சேகரிப்பதற்காதவும், கயிறு உற்பத்திக்காகவும் ஒதுக்கி வைக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்தார்.

கிராமத் தொழில்களை விருத்தி செய்வதென்பது, மைசூர் சர்க்காரின் தொழில் இலாகாவின் ஒரு முக்கிய நோக்கம். சிதல்டிரக் ஜில்லாவில் ஐமங்களாவிலும், திருவானூரிலும் கதர் உற்பத்தித்தொழிலும், தாடசித்தவான ஹல்லியில், தோல்பதனிடும் தொழிலும், ஹிரியூரில் பாய் உற்பத்தித் தொழிலும், நடந்து வருகின்றன. பாகூர் முதலிய இடங்களில், நவீன முறைகளில் நெசவுத்தொழில் பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன.

சித்தல் டிரக்கில் உள்ள தொழில் பள்ளிக்கூடத்தில், ரூ. 8000 செலவில் புதிய கம்பளிப் பகுதி ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஹிரியூரில் ஒரு அச்சுப் பகுதியும், சாயப்பகுதியும், ஏற்படுத்த ஜில்லா போர்டார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இதில் தேர்ச்சிபெற ஒரு உத்தியோகஸ்தரையும் பதனவாலுக்கு அனுப்பியிருந்தார்கள். அவர் இப்பொழுது தேர்ச்சிபெற்று திரும்பி வந்து விட்டபடியால் ஒரு கிளைஸ்தாபனம் சீக்கிரத்தில் அமைக்கப்பெறும். இவ்வருஷம் சமஸ்தானத்திலும் வெளியிலும் கதருக்கு அதிக தேவை உண்டாகி யிருப்பதும் கதரின் விற்பனை அதிகமாகி யிருப்பதும் மிக்க திருப்தியளிக்கிறது.

---

# மளிகைக்கடை மாணிக்கம் செட்டி

(ஸ்ரீ ஜி. பாலசுப்ரமணியம்)

(தொடர் கதை)

இக்கடிதத்தைச் செட்டியார் பார்த்ததும் அவருக்குண்டான சந்தோஷம் அளவற்றதா யிருந்தது. தெய்வமே அவர் மகனுக்குக் கும்பகோணத்தில் சம்பந்தம் ஏற்பாடு செய்து வைக்கப் பார்க்கிறார் என்று அவர் எண்ணினார். ஈச்வரனைப் பிரார்த்தித்துக்கொண்டு தன் மனைவியிடமும் இவ்விஷயங்களைச் சொல்லி அவளுடைய சம்மதத்தையும் பெற்றுக் கொண்டு குருமூர்த்தி செட்டியாருக்குப் பின் வருமாறு பதில் எழுதினார்.

மகாராஜராஜஸ்ரீ குருமூர்த்தி செட்டியாரவர்களுக்கு, கொட்டையூர் மாணிக்கம் செட்டி அனேக நமஸ்காரம். க்ஷேமம். தங்களுடைய அன்பான கடிதமும் தங்கள் குழந்தை சௌ. வரலக்ஷிமியின் ஜாதகமும் வரப்பெற்று மிகவும் சந்தோஷமடைந்தோம். என் பையன் ஜாதகமும் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். நான் இவ்வூரிலேயே எப்போதும் இருக்கிறவனாகையால் தாங்கள் எப்போது வர சௌகரியப் பட்டாலும் என்னை வந்து பார்த்துப் பேசிப்போகலாம். தங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்.

தங்கள் அன்புள்ள,

மாணிக்கம்.

இந்தமாதிரி பதிலை எழுதிப் போட்டுவிட்டு மாணிக்கம் செட்டியார் இக்கல்யாணத்தைப் பற்றியே ஆழ்ந்த யோசனை செய்ய ஆரம்பித்து விட்டார். பண்ணை கோவிந்தய்யரைக் கலக்காமல் அவர் ஒரு காரியமும் செய்வதில்லை யாகையால் உடனே அவரிடம் போய் விஷயத்தைச்சொல்லி அவருடைய அபிப்பிராயத்தையும் கேட்டார். இதைக் கேட்டதும் கோவிந்தய்யர் சந்தோஷப்பட்டு செட்டியாரை ஆசீர்வதித்து, "ஈசுவர சம்மதமானால் கல்யாணம் நிறைவேறுகிறது. உங்களுக்கு எல்லாவிதத்திலும் இது தகுந்த சம்பந்தமென்றே எனக்குத் தோன்றுகிறது. கும்பகோணத்தில் குருமூர்த்தி செட்டியார் மிகவும் வியாபகர். நல்ல கௌரவம் வாய்ந்தவர். இந்த வரன் என் மனதுக்குப் பிடித்ததாக இருக்கிறது."—என்று சொன்னார்.

"நானும் அதே அபிப்பிராயம் கொண்டவனாகத்தான் இருக்கிறேன். என் சம்சாரத்துக்கும் இது திருப்தியாகத்தானிருக்கிறது. சில நாட்களாய்ப் பையனும் கும்பகோணத்தில் போய்ப் புதிதாய் வியாபாரம் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறான். எனக்கும் முன் இருந்ததுபோல் இப்போது இங்கு வியாபாரம் சௌகரியமாய் நடந்துவரவில்லை. தாங்களும் இதைக் கவனித்திருக்கலாம். பையன் சொல்லுகிறபடி செய்யலாமாவென்று நான் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில்தான் கும்பகோணத்திலிருந்து இந்தக் கடிதம் வந்தது" என்று சொல்லிக் கொண்டே மாணிக்கம் செட்டியார் தன்னிடமிருந்த கடிதத்தைப் பண்ணை கோவிந்தய்யரிடம் கொடுத்தார். அவர் அதைப் பார்த்துவிட்டு, "ஓகோ ஜாதகம்கூட அனுப்பியிருக்கிறார் போலிருக்கிறதே, விஷயம் சீக்கிரமே நிச்சயமாய் விடலாமென்றே தோன்றுகிறது. உம்முடைய தர்ம சிந்தனைக்கு கடவுள் உம்மை எப்போதும் காப்பாற்றுவார், நீர் சந்தோஷமாகவே இருப்பீர்" என்று மனப்பூர்ணமான அபிமானத்துடன் கோவிந்தய்யர் சொல்லி அக்கடிதத்தைப் பார்த்துவிட்டு செட்டியாரிடம் திருப்பிக் கொடுத்து

"ஜாதகங்கள் சரியாயிருக்கிறதாவென்று ஜோசியரிடம் காண்பியும்" என்று சொன்னார்.

"பண்ணையின் ஆசீர்வாதமிருந்தால் எனக்கு ஒரு குறைவும் இல்லை, என் கௌரவமும் சௌக்கியமும் எல்லாம் தங்கள் தயவினால்தான். எனக்குத் தங்களைத்தவிர வேறு ஒருவரும் இல்லை. என் குழந்தையைத் தாங்கள்தான் ஆசீர்வதிக்க வேணும்" என்று சொல்லி மாணிக்கம் செட்டியார் அந்தக் கடிதத்தைத் திருப்பிப் பெற்றுக்கொண்டு வீடுவந்து சேர்ந்தார். வந்த உடனேயே ஓர் ஜோசியரை அழைத்துக்கொண்டுவரச்சொல்லி அனுப்பினார். சற்று நேரத்திற்கெல்லாம் ஜோசியரும் வந்து ஜாதகங்களைப் பரிசீலனை செய்து இரண்டும் பொருத்தமாக விருக்கிறதென்றும், இந்த சம்பந்தம் நிச்சயமாய்க் கைகூடுமென்றும் இதுமுதற்கொண்டு பையன் மேன்மேலும் யோகமுள்ளவனாக இருப்பானென்றும் சொல்லிவிட்டுப்போனார். செட்டியாருக்கு இருந்த ஆனந்தம் சொல்லி முடியாது.

மறுநாள் மாலையில் கும்பகோணத்திலிருந்து குருமூர்த்தி செட்டியாரும் வந்துவிட்டார். அவர் வந்தவுடன் அவரை மாணிக்கம் செட்டியார் நன்கு உபசரித்து இருவரும் குசலப்பிரச்னம் செய்த பிறகு கலியாண விஷயமாய்க் குருமூர்த்தி செட்டியார் பேச ஆரம்பித்தார்.

"தங்கள் பையன் ஜாதகம் வந்தது. அதையும் என் பெண் ஜாதகத்தையும் ஜோசியரிடம் காண்பித்ததில் இரண்டும் மிகவும் பொருத்தமா யிருக்கிறதாகவும் இக் கலியாணம் நிச்சயமாய் நடந்துவிடும் என்றும் சொல்லித் தங்கள் பையனுக்கு இக்கலியாணம் ஆனதுமுதல் கீர்த்தியும், செல்வாக்கும் உண்டாகும் என்றும் சொன்னார். எனக்கும் நல்ல சகுனம் ஆயிற்று. தங்கள் அபிப்பிராயத்தைச் சொன்னால் கலியாணத்தை நடத்துவதற்குண்டான ஏற்பாடுகள் செய்யலாம்" என்று சொன்னார்.

மாணிக்கம் செட்டியார் தான் ஜோசியரிடம் ஜாதகங்களைக் காண்பித்த விஷயத்தையும் தன்னுடைய ஜோசியரும் அதே அபிப்பிராயத்தை யுடையவராக யிருக்கிறார் என்றும் சொல்லிவிட்டு "பண்ணை கோவிந்தய்யர் அவர்களைத் தங்களுக்குத் தெரிந்திருக்க லாமே. எனக்கு அவர் குருஸ்தானத்திலிருக்கிற படியால் அவரையும் இந்த விஷயத்தைப் பற்றி நான் கலந்தேன். அவரும் இந்த சம்பந்தத்தை அங்கீகரித்து என்னையும் மனப்பூர்ணமாய் ஆசீர்வதித்தனுப்பினார். தங்களுக்கும் அவரை நன்றாய்த் தெரியும், என்று அவர் சொன்னார். நாம் இருவரும் அவரிடமே சென்று மேலே ஆக வேண்டியவைகளைப்பற்றி அவரைக் கலந்துகொண்டு பேசுவதில் தங்களுக்கு ஓர் ஆக்ஷேபனையும் இருக்காதென்று எண்ணுகிறேன். அங்கு போகலாமோ?" என்று கேட்டார்.

"அப்படியா, பண்ணை கோவிந்தய்யரா- எனக்கு அவர் ஆப்த நண்பராயிற்றே, சென்ற வருஷம் என் சிறிய தகப்பனார் ஜில்லாபோர்டு எலெக்ஷன் சம்பந்தமாய் நான் இவ்வூரில் அவரைத்தான் போய்ப் பார்த்தேன். இவ்வூரிலுள்ள எல்லா வோட்டுகளையும் அவர் என் சிறிய தகப்பனாருக்குப் போடும்படி செய்தார். அவரிடம்போய் இது சம்பந்தமாகக் கலந்துகொள்வதில் தங்களைவிடப் பதின்மடங்கு நான் சம்மதமுள்ளவனாக விருக்கிறேன்" என்றார். அவ்வாறே இருவரும் பண்ணை கோவிந்தய்யரைப் போய்ப் பார்த்து விஷயங்களைச் சொல்லிக் கொண்டார்கள். கோவிந்தய்யர் இவ்விருவர் சொன்னதையும் கேட்டுச் சந்தோஷமடைந்து—

"தங்களிருவர் மனதும் இக்கலியாண சம்மந்தமாய் ஒத்திருக்கிறது. நாம் இனி கலியாணம் நடத்தவேண்டிய விஷயத்தைப்பற்றித்தான் ஆலோசிக்கவேண்டும். குருமூர்த்தி! உனக்குத் தகுந்த சம்பந்தம் இதைவிட மேலானது கிடைக்காது. உங்கள் வீட்டில் அனேக கலியாணங்கள் அடிக்கடி நடந்திருக்கின்றன. நமது மாணிக்கம் செட்டியாருக்கு ஒரே குமாரன்தான். அவர் வீட்டில் இதுதான் முதல் கலியாணம். அவர் இக்கலியா

ணத்தை இவ்வூரிலேயே விமரிசையாய் நடத்தவேண்டுமென்று ஆசைப்படுகிறார். நீ அவர் இஷ்டப்படியே விட்டுவிட்டால் அவருக்கு மிகவும், திருப்தியாக இருக்கும். நீ எவ்வளவு விமரிசையாய்க் கலியாணத்தைச் செய்து முடிக்க ஆசைப்படுவாயோ அதைவிடப் பதின் மடங்கு அதிகமாகவே அவரும் நடத்தி வைப்பார் என்று நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். உனக்கும் உன்னைச் சேர்ந்தவர்களுக்கும் இந்த விஷயத்தில் ஓர் ஆக்ஷேபணையும் இருக்கக் கூடாது. சம்மதந்தானே?" என்று கேட்டார். "அப்படியே ஆகட்டும். எங்களுக்கு ஆக்ஷேபனை இல்லை. தவிர தங்கள் முன்னிலையில் கலியாணம் செய்வதில் அவரைவிடப் பதின்மடங்கு எனக்கும் சம்மதந்தான். ஆனால் கலியாணம் ஆனபிறகு எங்கள் வீட்டிலும் ஓர் விருந்து செய்ய எனக்கு அனுமதி கொடுத்துத் தாங்களும் அதற்கு வந்திருந்து நடத்தி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். தங்களுடைய ஆசீர்வாதம் இருந்தால் எங்களுக்கு ஒரு குறையுமில்லை," என்று சொன்னார் குருமூர்த்தி.

(குருமூர்த்தி செட்டியாரை இளம்பிராயம் முதற்கொண்டு கோவிந்தய்யருக்கு நன்றாய்த் தெரியமாதலால் அவரை ஏகவசனமாகவே அவர் பேசுவார்.)

இப்படிப் பேசிக்கொண்டு குருமூர்த்தி செட்டியார் கும்பகோணம் சென்றதிலிருந்து ஒரு மாதகாலத்துக்குள் கலியாணம் கொட்டையூரில் வெகு விமர்சையாய் நடந்தேறியது. தம்பதி சமேதராய்த் தங்கள் பையனைக் கும்பகோணத்திற்கு மாணிக்கம் செட்டியார் அழைத்துக்கொண்டு அவ்விடத்தில் சம்பந்தி குருமூர்த்தி செட்டியார் அவர்களுக்குச் செய்த மரியாதைகளைப் பெற்றுக் கொண்டு தன் பிள்ளையையும் மருமகளையும் ஊருக்கு அழைத்துவந்து சேர்ந்தார். கலியாண வைபவங்கள் எல்லாம் அடங்கித் தொழிலையும் வழக்கம்போல் கவனிக்க ஆரம்பித்து விட்டார். மருமகள் வரலக்ஷிமி இவர்கள் வீட்டிலேயே இருந்து வந்ததால் அவள் தாயாரும் தகப்பனாரும் அவளைப் பார்க்க அடிக்கடி வரலானார்கள். மாணிக்கம் செட்டியார் மகன் கொஞ்சம் சங்கோஜமுடையவனாதலால் அவன் மாமன் குருமூர்த்தி செட்டியார் வரும்போதெல்லாம் அவரெதிரிலேயே வராமலிருப்பான். இதைக்கண்டு அவன் தகப்பனார் சம்மந்திக்குக் காபி முதலியவை கொண்டு கொடுக்கிறதாயிருந்தால் குப்புசாமியையே கொண்டு வரும்படி செய்து அவனுடைய சங்கோஜம் தெளியும்படி ஏற்பாடு செய்தார். ஒருநாள் சம்பந்திகள் தங்கள் குழந்தையைப் பார்த்துவிட்டுத் திரும்பிக் கும்பகோணம் போனபிறகு குப்புசாமி தன் தகப்பனாரைப் பார்த்து தான் ஏற்கனவே கும்பகோணத்தில் பெரிய வியாபாரம் செய்ய வேண்டுமென்று கொண்ட அபிப்பிராயத்தைப் பற்றிக் கேட்கலானான். அவனுக்குத் தன் கலியாண காலத்தில் கும்பகோணத்திலிருந்து பல பிரமுகர்கள் வந்திருந்ததையும் பார்த்து, தான் தன் மாமன் வீட்டிற்குப் போயிருந்த காலங்களில் அங்கு நடந்த வியாபார முறையையும் வியாபகத்தையும் கவனித்துப் பார்த்தது முதற்கொண்டு தான் கும்பகோணத்தில் நவீன முறைப்படி பலத்த வியாபாரம் செய்ய வேண்டுமென்ற அவா அதிகரித்துக்கொண்டே இருந்தது. இவைகளை மனதில் வைத்துக் கொண்டு தன் தகப்பனாரைப் பார்த்து,

"ஏனப்பா! நான் தங்களிடம் ஏற்கனவே சொன்ன சமாசாரத்தைப்பற்றி மறந்து விட்டீர்கள் போலிருக்கிறதே! நான் கும்பகோணத்தில் தங்கள் சம்மந்தி வீட்டிற்குப் போயிருந்தபோது அங்கு நடந்த வியாபாரத்தைப் பார்த்தேன், பலத்த வியாபாரம் தான். இருந்தாலும் அவ்வளவு ஒழுங்காக அவர்கள் வியாபாரத்தை கவனித்துச் செய்து வருவதாகத் தோன்றவில்லை. நான் தங்களுடன் இங்கு நமது கடையைக் கவனித்து

வந்ததிலிருந்தும் நான் படித்து வந்த கிரந்தங்கள் மூலமாய்த் தெரிந்து கொண்டிருக்கிறதி லிருந்தும் நான் மிகவும் லாபாரமாயும் ஜனங்கள் மெச்சிக் கொள்ளத் தக்கதாயும் வியாபாரம் அங்கே நடத்தலாம் என்ற நம்பிக்கை எனக்குப் பூர்ணமாய் இருக்கிறது. இதைப்பற்றித் தங்கள் சம்மந்தியிடமும் கலந்து கொண்டாலென்ன? தங்களுக்கு இது சம்மந்தமாக தைரியமில்லாமல் போனாலும் அவருடைய அபிப்பிராயத்தையும் கேட்டால் தங்கள் மனதுக்குச் சமாதான மேற்படுமென்று எனக்குத் தோன்றுகிறது. கூடிய சீக்கிரம் தாங்கள் ஓர் நல்ல நாள் பார்த்துக் கும்பகோணத்தில் கடை திறந்து புதுக்கணக்குத் தாங்களே போட்டு என்னையும் அங்கேயே உட்கார்த்தி வைத்துவிட்டால் நான் நல்ல வியாபாரம் செய்யலாம் என்று எண்ணுகிறேன், தங்கள் அபிப்பிராயமஎன்ன?" என்று கேட்டான்.

இதைக் கேட்டதும் மாணிக்கம் செட்டியார் தன்னுடைய பையனுக்கு வியாபாரம் செய்வதில் இருக்கும் ஆவலையும், நல்ல படிப்பும் செல்வமும் இருந்த போதிலும் அவனுக்குச் செருக்குண்டாகாமலிருப்பதைப்பற்றியும் கவனித்துத் தன் மனதுக்குள்ளே சந்தோஷப் பட்டுக் கொண்டு,

"குப்புடு! நீ சொல்வது எனக்கும் சம்மதமாய்த்தான் இருக்கிறது. எனக்கு நீ ஒரேபுத்திரனுகையால் உன்னைத் தனியாக விடுவதற்கு எனக்கு மனம் வரவில்லை. எனக்கோ இவ்வூரைவிட்டு அங்கு வந்திருக்க முடியாது. நாமிருவரும் இவ்விடத்திலிருந்து அங்கு போய்விட்டால நமது நிலங்களும் வீடுகளும் பாழாய்ப் போய்விடும். அது பற்றித்தான் எனக்குக் கவலையாக இருக்கிறது. மற்றப்படி நீ சொல்வது எனக்கு ஆக்ஷேபனை இல்லை," என்றுர்.

"அப்பா! நம்மூரைவிட்டு நாம் ஜாகையை மாற்றவேண்டிய அவசியமே இல்லை. கும்பகோணம் இங்கிருந்து மூன்றுமைல் கூட இல்லை. அரைமணி நேரத்திற்குள் நாம் அங்கு போய்விடலாம. இங்கு நடத்திவரும் வியாபாரத்தையும் நாம் நிறுத்த வேண்டியதில்லை. நான் சொல்லும் வியாபாரமானது இங்கு நடத்திவரும் சில்லரை வியாபாரம்போல் அல்ல. மொத்த வியாபாரம்தான். பல தான்யங்களையும் அவைகள் விளைந்து வெளிவரும் காலங்களில் மொத்தமாக வாங்கி வைத்துச் சில்லரை வியாபாரிகளுக்கு அவரவர்கள் தேவைக்குத் தகுந்தவாறு நாம் கொடுப்பதாயிருந்தால் நமக்குப் பெருத்த வியாபாரம். அதற்காக அதிக ஆள் மாகாணமும் வேண்டியதில்லை, சிக்கனமாகவும் லாபகரமாகவும் நடத்தலாம். பலசரக்குக்கடையில உள்ள சில்லரைத தொல்லை நமக்கு இராது. இந்தக் கையில் வாங்கி அந்தக் கையில் கொடுத்துவிடுவோமேயானல் போதும், நமக்கு லாபமும் வந்துவிடும், சிரமமும் அதிகமாய் இல்லை" என்ருன்.

"நீ சொல்வதைப் பார்த்தால் நமக்கிருக்கும் முதலே போதாது போலிருக்கிறதே! ஏககாலத்தில் மொத்தமாக நாம் எவ்வளவு சரக்கு வாங்க முடியும்? எந்தச் சரக்கை வாங்குகிறது எதைத் தள்ளுகிறது? நீ சொல்வது எனக்கு ஒன்றும் புரியவில்லை. எல்லாவற்றிற்கும் உன் மாமனுக்கு நானே கடிதம் எழுதித் தருவிக்கிறேன். பண்ணையிடமும் போய் கலந்துகொள்ளுவோம். ஏற்கனவே நீ சொல்லும் விஷயத்தை அவர் காதில் போட்டிருக்கிறேன் இது பெரிய விஷயமாதலால் எல்லோரையும் கலந்துதான் நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். காலையில் நீ போய்ப் பண்ணை அய்யர் அவர்களைப் பார்த்து அவரிடம் விஷயங்களைச் சொல்லு.

உன் மாமனும் கும்பகோணத்திலிருந்து வரட்டும்," என்று மாணிக்கம் செட்டியார் சொன்னர்.

(தொடரும்)




# கழுவிற்கு ஏற்ற கோமுட்டி

(கே. சிவராமன்)

ஓர் ஊரில் ஒரு குடியானவன் இருந்தான். அவன் புதியதாக கூரை வீடு ஒன்று கட்டினான். ஒரு நாள் திருடன் ஒருவன் அந்த வீட்டில் திருடவந்தான். அவன் சுவரில் கன்னம் வைத்து அதன் வழியாக உள்ளே நுழைந்தான். அப்பொழுது சுவர் ஈரம் காயாமல் இருந்தபடியால் அவன் கழுத்தின் மேல் விழுந்துவிட்டது. அவன் அப்படியே செத்துப் போய்விட்டான். காலையில் குடியானவன் திருடன் இறந்து கிடப்பதைப் பார்த்தான். உடனே அவ்வூர் அரசனிடம் சென்று, "ஓ அரசே! என்வீட்டில் ஒரு திருடன் கன்னம் வைத்து நுழைந்தான். சுவர் ஈரமாக இருந்தபடியால் அவன் கழுத்தின்மேல் அமுங்கி விட்டது. ஆகையால் உயிர்துறந்தான்," என்று சொன்னான்.

அதற்கு அரசன், "ஓ ஹோ! அப்படியா! சரி, நீ ஏன் சுவரை ஈரமாகக் கட்டினாய்? அதனால் தானே திருடன் செத்துப்போய்விட்டான். ஆகையால் உன்னை இப்பொழுதே கழுவில் ஏற்றிவிடப்போகிறேன்," என்றான். குடியானவன் நல்ல புத்திசாலி. ஆகையால் அவன் உடனே, "அரசனே! நானோ குடியானவன்; எனக்கு வீட்டுச் சுவரைப்பற்றி என்ன தெரியும்? வீடுகட்டிய மேஸ்த்ரி அல்லவா அதற்கு ஜவாப்தாரி" என்று சொல்லிவிட்டு, 'தலை தப்பியது தம்பிரான் புண்யம்' என்று ஓடிப்போய் விட்டான். உடனே அரசன் சேவகர்களை அனுப்பி வீடு கட்டிய மேஸ்திரியை வரவழைத்தான். அவன் வந்ததும் அவனைப் பார்த்து அரசன், "ஏ மேஸ்திரியே, நீ ஏன் குடியானவன் வீட்டுச்சுவரை ஈரமாக வைத்தாய்? அதனால் தானே அது திருடன் கழுத்தில் விழுந்து அவன் செத்துப்போனான். ஆகையால் உன்னைக் கழுவில் ஏற்றப்போகிறேன்" என்று சொன்னான். அதற்கு மேஸ்திரி "அரசே! நான் என்ன செய்வேன்? என்னுடன் வேலைசெய்த என் சிற்றாள் மண்ணில் நிறைய தண்ணீர் ஊற்றி விட்டான். அதனால் தான் சுவர் அதிக ஈரமாகப் போய்விட்டது. ஆகையால் சிற்றாள்தான் இதற்கு ஜவாப்தாரி," என்று சொல்லிவிட்டான்.

உடனே அரசன் சிற்றாளை அழைத்துவரச்சொன்னான். அவன் வந்ததும்அரசன் அவனைப்பார்த்து, "நீ மண்ணில் அதிக ஜலம் ஊற்றினாய். மேஸ்திரி சுவரை ஈரமாக வைத்து விட்டான். அதனால் திருடன் கழுத்தில், அது விழுந்து அவன் இறந்தான். ஆகையால் உன்னைக் கழுவில் ஏற்றப் போகிறேன்," என்றான். அவன் அதற்கு, "அரசே! நான் என்ன செய்வேன்.

குயவன் பானையைப் பெரியதாகப் பண்ணிவிட்டான். அதனால் மண்ணில் அதிக தண்ணீர் ஊற்றிவிட்டேன். ஆகையால் என் மேல் தப்பு இல்லை. குயவனைக் கூப்பிட்டு விசாரியுங்கள்,'' என்று சொல்லிப் போய்விட்டான். உடனே அரசன் குயவனை அழைத்துவரச் சொன்னான். அவன் வந்ததும் அரசன் அவனைப் பார்த்து, "ஏ குயவனே! நீ பானையைப் பெரியதாகப் பண்ணினாய். சிற்றாள் அதிக தண்ணீரை மண்ணில் கொட்டிவிட்டான். மேஸ்திரி சுவரை ஈரமாக வைத்துவிட்டான். அதனால் திருடன் கழுத்தில் சுவர் விழுந்து அவன் இறந்தான். ஆகையால் உன்னைக் கழுவில் ஏற்றப் போகிறேன்,'' என்றான்.

அதற்குக் குயவன், "ஏ அரசே! பானை பண்ணிக்கொண்டிருக்கும் பொழுது ஒரு தாசி அவ்வழியே போனாள். அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தமையால் பானை பெரியதாகி விட்டது. ஆகையால் தாங்கள் அந்த தாசியைக் கூப்பிட்டுக் கேட்க வேண்டும்,'' என்று சொன்னான். உடனே அரசன், "ஓஹோ! அப்படியா சமாசாரம்! அந்த தாசியை இப்பொழுதே இழுத்துக்கொண்டு வாருங்கள்,'' என்று கட்டளையிட்டான். தாசி வந்ததும் அவளைப்பார்த்து, "ஏ தாசியே! நீ இந்தக் குயவன் வீட்டு வழியாகப் போய்க்கொண்டு இருந்தாய். உன்னைப் பார்த்துக் கொண்டு இருந்தமையால் குயவன் பானையைப் பெரியதாக்கி விட்டான். ஆகையால் சிற்றாள் மண்ணில் நிறைய தண்ணீரைக் கொட்டிவிட்டான். சுவர் அதிக ஈரமாகிவிட்டது. அதனால் அது திருடன் கழுத்தில் விழுந்து அவன் இறந்தான். ஆகையால் உன்னைக் கழுவில் ஏற்றப் போகின்றேன்,'' என்றான்.

அதற்கு அந்த தாசி, "ஓ அரசனே! என்மேல் ஒரு, தப்பும் இல்லை. கோடித் தெருவு கொ. ம. ச. க. ர. கோமுட்டிச் செட்டி பணம் கொடுக்க வேண்டும். ஆகையால் நான் குயவன்வீட்டு வழியாகப் போக நேர்ந்தது. திருடன் செத்துப் போனதற்குக் கோமுட்டியே காரணம். ஆகையால் கோமுட்டியே கழுவில் ஏற்றத் தகுந்தவன்,'' என்று சொல்லிவிட்டு, தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனதே, என்று சந்தோஷத்துடன் போய்விட்டாள்.

அரசன் அவ்வாறே கோமுட்டியை அழைத்து வரும்படி உத்திரவிட்டான். கோமுட்டி வந்ததும் அவனைப்பார்த்து, "ஐயா கோமுட்டியாரே! நீர் தாசியிடம் கடன் பட்டு இருந்தமையால் அந்த தாசி குயவன் வீட்டு வழியே வர நேர்ந்தது. அவளைப் பார்த்துக்கொண்டு இருந்தமையால் குயவன் பானையை பெரியதாகச் செய்து விட்டான். ஆகையால் மண்ணில் அதிக தண்ணீரைச் சிற்றாள் ஊற்றிவிட்டான். அதனால் சுவர் ஈரமாகப் போய்விட்டது. அது திருடன் கழுத்தை அமுக்கியதால் அவன் இறந்துவிட்டான். இந்தக் கொலைக்கு நீரே காரணம். ஆகையால் உம்மைக் கழுவில் ஏற்றப்போகிறேன்,'' என்று சொன்னான்.

கோமுட்டிக்கு உடம்பு விலவிலத்து விட்டது. அவன் புத்தி சாலியில்லை. ஆகையால் அவன் ஆந்தை மாதிரி பேந்தப் பேந்தவிழித்தான். அரசன் சபையில் எல்லோரும்

"கழுவிற்கு ஏற்ற கோமுட்டி" என்று சொல்லி நகைத்தார்கள்.

அரசன் சபையில் ஒரு சோதிடன் இருந்தான். அவன் மிகவும் சாமர்த்தியசாலி. அவன் கோமுட்டியை எப்படியாவது தப்பித்துவிட வேண்டும் என்று ஒரு உபாயம் செய்தான். அவன் அரசனை வணங்கி "ஓ ராஜாதி ராஜனே! நான் ஒரு விண்ணப்பம் செய்து கொள்கிறேன். தாங்கள் அருள் புரிய வேண்டும்," என்று மிகவும் வணக்கமாகச் சொன்னான். அரசனும் அனுமதி கொடுத்தான். அந்த சோதிடன் அரசனை மறுபடி வணங்கி "ஓ அரசே! நான் நேற்று தான் இந்தக் கோமுட்டியின் ஜாதகத்தைப் பார்த்தேன். அதில் அரசன் செத்துப் போவதற்கு மூன்று நாளுக்குமுன் இவன் செத்துப் போவான் என்று இருந்தது," என்று சொன்னான்,

அதைக்கேட்டதும் அரசன் நடு நடுங்கி "யானைதன் தலையில் தானே மண்ணைப் போட்டுக் கொள்கிறாப் போல் என் சாவை நானே தேடிக் கொண்டேனே. நல்ல காலம் கடவுள்தான் என்னைக் காப்பதற்காக சோதிடனை இவ்விடம் அனுப்பினார்," என்று நினைத்துக்கொண்டு கோமுட்டியைக் கழுவில் ஏற்ற வேண்டாம் என்றும், தான் அவனை மன்னித்து விட்டதாகவும் சொல்லி விட்டான். பிறகு அந்த சோதிடனுக்கும் வேண்டிய பணம் கொடுத்து அனுப்பினான். கோமுட்டியைத் தன் அரண்மனையிலேயே வைத்துக் கொண்டு அவனுக்கு ஒரு ஆபத்தும் வராமல் காப்பாற்றினான்.

---

"ஓர் வண்டியின் சக்கரம் வண்டிச் சுவட்டில் மாட்டிக்கொண்டால் எல்லோரும் மாட்டின் முன்னங்கால்களைப் பிடித்திழுப்பதல்லாமல், சக்கரத்தையும் பின்புறத்திலிருந்து தள்ளுவார்கள்" என்று நம் பிரதம மந்திரி ஆச்சாரியார் ஆலயப் பிரவேசத்தைப் பற்றிக் கூறும்பொழுது ஓர் திருஷ்டாந்தம் சொல்கிறார். ஆனால் முன்னங்கால்களைப் பிடித்திழுப்பதான அபாயகரமான வேலைகளை எவரும் அசட்டுத்தனமாகச் செய்யமாட்டார். எல்லோரும் செய்வது என்னவென்றால் மாட்டின் மூக்குக் கயிற்றைப் பிடித்திழுத்துக் கொண்டு, மாட்டின் முதுகில் ஷொட்டு கொடுத்துக் கொண்டும், பின்புறத்திலிருந்து வண்டிச் சக்கரத்தைத் தள்ளுவார்கள். (இந்தியன் எக்ஸ்பிரஸ்.)

* * *

"ஐரோப்பாவில் வகுப்புச் சச்சரவுகள் அதிகமாக இருக்கின்றன. அது பல ஜனங்களுடைய க்ஷேமத்தைக் கெடுக்கின்றது. குழந்தைகளை அன்றுடம் குண்டு தடுக்கும் இடத்திற்குப்போகும் வித்தையைப் பழக்கிக் கொடுக்கிறார்கள். அங்கே எல்லோருடைய மனமும் உடைந்து சிதறிக் கிடக்கின்றது. தூங்குப்பொழுது கூட ஒவ்வொருவரும் வரப்போகும் கோரமான யுத்தத்தை நினைத்து நெஞ்சங் கலங்குகிறார்கள். இளஞ் சிறுவர்களோ எப்பொழுதும் நடுங்கிக் கொண்டே காலத்தைக் கடத்துகிறார்கள். 'ஆறிலும் சாவு, நூறிலும் சாவு' என்று அசட்டுத் தைர்யத்துடன் பேசுகிறார்கள். ஆனால் இங்கேயோ, எங்குமில்லாத சுதந்தரம் குடிகொண்டிருக்கின்றது. அக்காரணம் பற்றித்தான் நான் என் தாய்நாடான ஐரோப்பாவை விட்டு அமெரிக்காவிற்கு வந்தேன்"

சினிமா நடிகை 'லியா லிஸ்'

சுகாதாரம்

# இலகு வைத்யம்

(பி. எஸ். ராமநாத ஐயர், பார்மஸி, மைலாப்பூர்)

A. கிஷாயம் :—1. கோரைக்கிழங்கு, 2. வெட்டிவேர், 3. விளாமிச்சவேர், 4. பர்பாடகம், 5. சந்தனக்கட்டை, 6. சுக்கு இவைகள் வகைக்கு $\frac{1}{2}$ ரூபாயிடை சிறியதாக தூள்செய்து 16 அவுன்ஸ் ஜலத்தில் போட்டு 4 அவுன்ஸாகக் காய்ச்சிவடிகட்டி வேளைக்கு 2 அவுன்ஸ் சூட்டுடன்சாப்பிட வேண்டும்.

2. மாத்திரை :—1. சுக்கு, 2. மிளகு, 3. திப்பிலி, 4. கடுக்காய்தோல், 5. தானிக்காய் தோல், 6. காஞ்சநெல்லிக்காய்தோல், 7. சீரகம், 8. கருஞ்சீரகம், 9. வசம்பு, 10. சீமை நிலவேம்பு, 11. ஜாதிக்காய், 12. இந்துப்பு, 13. பச்சை கற்பூரம், 14. சென்னிநாயகம், 15. கிராம்பு, 16. வெள்ளைப்பூண்டு, 17. தக்கோலம், 18. கோஷ்டம், 19. காயம், 20. லவங்கப்பட்டை, 21. கோரைக்கிழங்கு, 22. ஓமம் இவைகளில் சமனிடை வெயிலில் உலர்த்திப் பொடிசெய்து, கருநொச்சிச்சாறில் நன்ருகஅரைத்துக் குந்துமணிபிரமாணம் உருட்டிக் காயவைத்துக் கொள்ளவும். அனுபானம் :—சுக்கு ஜலம் அல்லது மேல் சொன்ன கஷாயம் காலை மாலை இரண்டுவேளை சாப்பிடவும்.

B. குளிர்ஜ்வரத்திற்கு:-1. ஜீரகம், 2. சுக்கு, 3. மிளகு, 4. திப்பலி, 5. வெள்ளைப்பூண்டு இவைகள் சமனிடை (வகைக்கு $\frac{1}{8}$ ரூபாயிடை வென்னீரில் நன்ருக அரைத்து 3, 4 அவுன்ஸ் வென்னீரில் கலந்து ஜ்வரம் வரும் சமயத்தில் சாப்பிட்டு வர, 3, 4 தினங்களில் பூர்ண சுகம் கிடைக்கும்.

C. முறை ஜ்வரங்களுக்கு:-1. நிலவேம்பு, 2. சீந்திலக்கொடி, 3. பர்பாடகம், 4. கோரைக்கிழங்கு 5. கடுகுரோஹிணி இவை வகைக்கு $\frac{3}{4}$ ரூபாயிடை சிறியதாக தூள்செய்து 16 அவுன்ஸ் தண்ணீரில் போட்டு 4 அவுன்ஸ் கஷாயம் ஆகிய பிறகு $\frac{1}{2}$ தேகரண்டி தேன் சேர்த்து காலை மாலை சாப்பிடவும்.

D. ஜ்வரத்தில் தலைவலி தலைபாரம். போக்க :—1. சித்தரத்தை, 2. அமுக்கராங்கிழங்கு, 3. தேவதாரம், 4. கடுகுரோஹிணி, 5. சென்னிநாயகம், 6. குங்குல்லியம், 7. கோஷ்டம், 8. வசம்பு, 9. காவிமண், 10. மஞ்சள், 11. அதிமதுரம், 12. சித்தாமுட்டிவேர், 13. சுக்கு, 14. மிளகு, 15. திப்பிலி, 16. வெட்டிவேர், 17. சகஸ்ரவேதிக்கல், 18. விளாமிச்சவேர், 19. கடல்நாக்கு, 20. சந்தனக்கட்டை, 21. அகில், 22. புளியிலைசாறு (இலைபோக்கி) இவைகள் சமனிடை காயவைத்து நன்ருக தூள்செய்து வஸ்திராயம் பண்ணிய சூர்ணம் ஆடாதோடை சாறும் தாய்ப்பாலும் சேர்த்துகுழைத்து உச்சியிலும், நெற்றியிலும் பற்றுப்போட்டுவரவும். சித்தாமணக்கெண்ணெய் சூடுசெய்ததிலும் பற்று போடலாம்.

E. குழந்தைகளுக்கு மார்ச்சளி, ஜலதோஷம், இருமல், ஜ்வரம் முதலியவைகளுக்கு :—கஷாயம்—கண்டங்கத்திரி ஸமூலம் ரூபாயிடை $1\frac{1}{4}$, 2. சீந்திக்கொடி ரூபாயிடை $\frac{3}{4}$. 3. சுக்கு ரூபாயிடை $\frac{1}{2}$. 16 அவுன்ஸ் ஜலத்தில்போட்டு 4. அவுன்சாகக் காச்சி வடிகட்டி வேளைக்கு $\frac{1}{2}$, அவுன்ஸ் வயதுக்குத் தக்கபடி கொஞ்சம் திப்பிலிப்பொடி சேர்த்துக் காலை மாலை இருவேளை கொடுக்கவும்.

---

"விமர்சனம்"

# "அதிர்ஷ்டம்"

இப்பெயர் கொண்ட தமிழ்ப்படம் 29-7-39ந் தேதியிலிருந்து கெயிடி டாக்கீஸில் காண்பிக்கப்பட்டு வருகிறது. பெயரைப் பார்த்ததும் இது புராணப் படமல்ல என்று தெரிந்து கொள்ளலாம்.

உண்மையில் சொத்துக் குடையவன் ஒருவன் இருக்க மற்றொருவன் அச் சொத்தை அநுபவிப்பது என்றால், எத்தனை நாள் அப்படி அநுபவிக்க முடியும்? கழுதைக்குப் புலித்தோல் போட்டால், கழுதை நிஜப்புலியாய் விடுமா? இது தான் இந்தக் கதையின் முக்கிய கருத்து.

படம் நன்றாயிருக்கிறது. பார்ப்பவர்கள் வயிறு புண்ணாகும்படி, அவ்வளவு நகைச்சுவை ததும்பும் காட்சிகளிருக்கின்றன. ஒரு பட்டிக் காட்டான் மோட்டார் கார் ஓட்டுவதைப் பார்க்கும்பொழுது உற்சாகமும் நகைப்பும் உண்டாகின்றன.

பட்டிக்காட்டு "ஜம்பு"வாக நடித்திருக்கும் கொத்தமங்கலம்-சுப்பிரமணியம் அசல் பட்டிக்காட்டுப் பிச்சுவைப் போலவே நடித்திருக்கிறார். அவருடைய நடிப்பு முதல் தரமென்றே கூறலாம். அடுத்தபடியாக ஸ்ரீமதி செல்லத்தைக் கூறலாம். அவர் வக்கீலாக வாதாடும் பொழுது அவருடைய பேச்சுத் திறமை உண்மையில் வக்கீல் பரீக்ஷை பாஸ் செய்தவர்களுக்குக் கூட இருக்குமா என்று சந்தேகிக்க இடம் கொடுக்கிறது. பொதுவாக மற்ற எல்லாருடைய நடிப்பும் நன்றாயிருக்கிறது.

மற்ற தமிழ்ப் படங்களைப் போல் இந்தப் படத்தில் அதிகப்பாட்டுகள் இல்லை. அது ஒரு முக்கிய அம்சம். இருக்கும் இரண்டொரு பாட்டுக்களும் நன்றாயிருக்கின்றன. படப்பிடிப்பு, ஒலிப்பதிவு முதலிய அம்சங்களில் குறை கூறுவதற்கில்லை. சில இடத்தில் தமிழ்ப் படத்திலேயே காணப்படாத நிழல் காட்சிகள் காணப்படுகின்றன. டெலிபோன் வழியாகப் பாடுவது இன்னொரு நவீனம்.

படத்திற்குச் சம்மந்த மில்லாத பல காட்சிகள் இதில் தனித் தனியே நிற்கின்றன. கதையும் அவ்வளவு சீக்கிரத்தில் புரிந்து கொள்ளக் கூடியதாயில்லை.

இந்தப் படத்தின் ஆரம்ப விழாவிற்குத் தலைமை வகித்த ஸ்ரீ புலுஸு சாம்ப மூர்த்தி, இப்படத்தை டைரக்ட் செய்த ஸ்ரீ. எஸ். டி. எஸ். யோகியாரைக் குறித்து இவர் மிகவும் பாராட்டுக்குரியவர் என்று கூறியது மிகவும் பொருந்தும்.

யோகியாரின் இரண்டாவது படமாகிய இது ஒரு வெற்றி கரமானதென்றே கூறலாம்.

"மாது"

---

# "பாரத தேவி'

தமிழ்க் கலை அபிவிருத்திக்காகத் தொண்டு புரிந்து வரும் ஸ்ரீ வ. ரா. பிரசுரிக்கும் "பாரத தேவி" என்ற அழகிய பெயரையுடைய வாரப்பத்திரிகையின் முதல் நான்கு இதழ்கள் வரப்பெற்றோம். தமிழ் நாட்டிற்கு வ. ரா. அறிமுகப்படுத்த வேண்டியவரல்லர். சீரிய நடையில் விஷயங்களைத் தெளிவுற எழுதும் சக்தி வாய்ந்தவர். அரசியல் விஷயங்களில் விசேஷப் பற்றுள்ளவர்.

இதுவரையில் வெளிவந்த நான்கு இதழ்களும், பொதுஜன ரஞ்சகமாக இருக்கின்றன. அழகிய முகப்புப் படங்களுடனும் கதைகள் கட்டுரைகளுடனும் இவ்விதழ்கள் வெளிவந்திருப்பது "தமிழ் மக்களை இப்பத்திரிகை வசீகரிக்கும்." என்று நம்பக்கூடியதாக இருக்கிறது.

இதுபோன்ற பத்திரிகைகள் நீடூழியாக வாழ்ந்து தேசத் தொண்டு புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.




## வயதானவர்களைப் படிப்பிப்பது

வயதானவர்களுக்கு வித்தை கற்பிக்கும் இயக்கம் சென்ற சில நாட்களாக தேசமெங்கும் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. காங்கிரஸ் மந்திரி சபைகள் இந்தப் பிரச்னையை ஒரு முக்கியமானதாகக் கருதி வருகிறார்கள். இண்டர் - யூனிவர்ஸிடி போர்டும் இதில் அக்கரை எடுத்துக்கொண்டு இப்படிப்பிக்கும் தொண்டுக்கு வேண்டிய உதவி அளிக்கும்படி இந்தியா சர்வ கலாசாலைகளைத் தூண்டிற்று. ஸ்தல ஸ்தாபனங்கள் கூட அந்தந்த எல்லைக்குள் இதற்குத் தகுந்த காரியங்களைச் செய்து வருகின்றன. மேற்சொன்ன சாதகங்களுடன் மாகாணங்களில் சுய ஆட்சி இருப்பதாலும் வயதானவர்களைப் படிப்பிக்கும் இயக்கம் வெற்றியடையும் என்று தோன்றுகிறது.

ஒரு ஜன நாயகத்தில் வயதானவர்களைப் படிப்பிப்பது, அவர்கள் ஆலோசிக்கும் சக்தியடையச் செய்வதற்குத்தான். அறியாமையை அவர்களிடமிருந்து ஒழிக்கவேண்டும். புத்திசாலித்தனத்துடன் ஒரு அபிப்பிராயத்தைக் கொள்ளும் சக்தியை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும். வயதானவர்களுக்குக் கற்பிக்கப்படும் படிப்பு அவர்கள் சிந்தனா சக்தியை அதிகரித்து, உலக விவகாரங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்கிற அவாவை உண்டு பண்ணக்கூடியதாக இருக்க வேண்டும்.

* * *

அறியாமை அரக்கனை ஒழிக்க ஒரு தகுந்த முறையும் இருக்கிறது. வயதானவர்களுக்கு கல்வி கற்பிப்பதோடு கூட அந்தந்த இந்திய பாஷையில் ஒரு நல்ல மாதமிருமுறை வெளிவரும் சஞ்சிகையோ அல்லது வாரச் சஞ்சிகையே பொது மக்களுக்குச் சேரும்படி ஒரு திட்டம் போட்டு வேலை செய்யவேண்டும். அச்சஞ்சிகை ஜனங்களுக்கு உபயோகமானதும் புத்தி புகட்டக் கூடியதுமான விஷயங்களை யுடையதாய் இருக்கவேண்டும். இச் சஞ்சிகை கிராமப் பள்ளிக்கூடத்து உபாத்தியாயருக்குப் போய்ச் சேரும்படியாகச் செய்து அவர்கள் சம்பளத்தைச் சிறிது அதிகரித்து அவர்களை ஒன்று சேர்த்து இச் சஞ்சிகையிலுள்ள முக்கிய விஷயங்களைப் படித்துக் காட்டும்படி செய்யவேண்டும்.

—ராவ் பகதூர் கே. வி. கிருஷ்ண ஸ்வாமி ஐயர்.

## கோச்சித் துறைமுகத்தின் அபிவிருத்தி

கொச்சித்திவான் ஸர் ஆர். கே. ஷண்முகம் சென்னை அகில இந்திய ரேடியோவில் பேசியது :—

கொச்சி துறைமுகம் அழகிய காட்சிகளையும், கடல் அயலெரிகளையும் கடற்கழிகளையும் பெற்றிருப்பதால் அதனை "கீழ் நாட்டு வெனிஸ்" எனப் பலர் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள். அட்ரெயிடிக் கடலுக்கு வெனிஸ் ராணி யென்று சொல்வதே போல கொச்சியை "அரபிக்கடலின் ராணி" என்றும் கூறலாம். கொண்டாடத்தகுந்த அழகும் சிறப்பும் இருந்துங்கூட இந்தியாவின் தென் மேற்குக் கோடியிலிருக்கும் இக்கொச்சியைச் சிலரே பார்த்துளர்.

தேச சரித்திரத்தில் கொச்சி ஓர் முக்கியமான ஸ்தானத்தை வகிக்கிறது. இப் பிரதேசம் பண்டைக் காலத்தில் சேரர்களால் ஆளப்பட்டு வந்தது. இப்பொழுதுள்ள புதிய துறைமுகத்திற்கு 20 மைலுக்கப்பாலுள்ள "கிராங்கனூர்" என்னும் ஓர் சிறிய கிராமம் கிறிஸ்து பிறப்பதற்கு முன்பிருந்தே ஓர் சிறந்த துறைமுகமாக விளங்கியது. அதுவுந் தவிர "தாமஸ்" என்னும் ஓர் மஹான் இந்தியாவிற்கு வந்தபொழுது முதன் முதலில் இக்கிராமத்தில் இறங்கி பலரை மதமாற்றினர் என்று கர்ண பரம்பரையாகக் கூறுவதுமுண்டு. சரித்திரத்தை நம்பா விட்டாலும்

இங்கு கட்டியிருக்கும் ஓர் மாதா கோவிலே இதற்குச் சான்ருகும். மேல் நாட்டிலிருந்து அநேக யூதர்கள் அக்காலந் தொட்டே இங்கு குடியேறி யிருக்கிருர்கள். இவ்வித மேன்மை வாய்ந்த இடத்தில் தான் கொச்சியின் புதிய துறைமுகம் அமைக்கப் பட்டிருக்கிறது.

கொச்சித் துறைமுகம் இயற்கையிலேயே பல சௌகரியங்களை அடைந்திருக்கிறது. 400 கெஜ அகல முள்ள கடல்வாய்க் கப்பால் 120 சதுர மைல் விஸ்தீரணமுள்ள கடற்கழியுளது. ஆனல் கடற்கழிக்கும், கடலுக்கும் இடையிலுள்ள பெரும் மணற்குன்றுகளானது பெருங்கப்பல் வருவதற்கும் போவதற்கும் இடையூருக இருக்கின்றன. சுமார் நூறு வருஷங்களாக ஜனங்கள் இத்துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவேண்டு மென்று கூறி வந்தனர். ஆனல் 1921-ல் தான் துறைமுகத்தை விரிவு படுத்தவேண்டிய வேலைகள் மும்முறமாகத் தொடங்கின. துறைமுகத்தை விரிவுபடுத்தவேண்டுமானல் கடற்கழிக்கும் கடலுக்கும் இடையிலுள்ள மணற்குன்றுகளைக் கரைத்து அழிக்கவேண்டும். இவ்வேலையைத் துறைமுக இஞ்சினியர் ஒருவர் இருபது வருஷங்கள் கஷ்டப்பட்டுச் செய்து முடித்தார்.

மேற் கூறிய மணற்குன்றுகளைச் சேதித்துத் தள்ளிய தன் பயனுக 800 ஏகரா விஸ்தீரணமுள்ள "வெல்லிங்டன்" என்று ஓர் சிறு தீவு ஏற்பட்டது. இத்தீவில்தான், ஏற்றுமதி இறக்குமதி செய்யும் சாலைகளும், துறைமுக ரெயில்வேயும், மற்றும் அதைச் சார்ந்த கட்டிடங்களும் இருக்கின்றன. வருங்காலத்தில் இத்தீவானது இன்னும் வெகுவாக விருத்தியடையும் என்பதில் ஐயமில்லை.

இந்திய அரசாங்கத்தாரும் கொச்சி, திருவாங்கூர் சமஸ்தானங்களும் இத்துறைமுக அபிவிருத்திக்குக் காரணபூதர்கள். புதிய துறைமுகம் கட்டுவதற்கு முன்பாக சென்னைத் துறைத்தனத்தார் இதில் வரும் லாபத்தில் பங்கெடுத்துக் கொண்டிருந்தனர். இப்பொழுது கொச்சி பெரிய துறைமுகங்களில் ஒன்ருனதும் சென்னைத் துறைத்தனத்தார் அதிவிருந்து விலகிக்கொண்டனர்.

துறைமுகத்தின் நடவடிக்கைகளெல்லாம் கொச்சி அரசாங்கத்தாரின் ஆதிபத்தியத்தில் நடந்து வருகிறது. துறைமுகத்தின் தினசரி பரிபாலனத்தைத் துறைமுகச் சங்கத்தாரிடம் ஒப்படைத்திருக்கிறது. இச்சங்கத்தில் இந்திய அரசாங்கத்தாரும், கொச்சி, திருவாங்கூர் முதலிய சமஸ்தானங்களும், பிரிட்டிஷ் கொச்சி, எர்ணுகுளம், மட்டஞ்சேரி முதலிய முனிசிபாலிடிகளும் வியாபாரச் சங்கத்தார்களும் இடம் பெற்றிருக்கின்றனர். 1937-38ல் தண்டப்பெற்ற மொத்த வரி சுமார் 100 லட்சமிருக்கும். அதில் கொச்சிக்கு 25 லட்சமும், திருவாங்கூருக்கு 10 லட்சமும் போக மிகுதியை இந்திய அரசாங்கத்தார் அடைந்தனர். ஒவ்வொரு வருஷமும் சுமார் 800 கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு வந்து போகின்றன. 8,00,000 சரக்கு மூட்டைகள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படுகின்றன.

கொச்சித் துறைமுகம் தற்காலத் துறைமுகங்களுக்குள்ள சாதனங்களைச் சீக்கிரம் அடைந்துவிடும். வருங்காலத்தில் இது இந்தியாவிலுள்ள முக்கிய துறைமுகங்களில் ஒன்ருகும். கடல் கொந்தளிப்பின், அயல் நாடுகளிலிருந்து சூயஸ் கால்வாய் வழியாக வரும் கப்பல்கள் இங்குத் தங்கிவிட்டுச் செல்லலாம். இத்துறைமுகத்தால் கொச்சி மட்டுமல்லாமல் தென்னிந்தியா பூராவும் பலனடைகின்றது.

இத்துறைமுகம் மேன்மேலும் விருத்தியடைவது ஓர் ஆச்சர்யமல்ல. ஏனென்ருல், பம்பாய், கராச்சி, சென்னை முதலிய துறைமுகங்கள் பிறப்பதற்குப் பல வருஷங்களுக்கு முன்பிருந்தே மேல் நாட்டினர் இத்துறைமுகத்தின் வழியே நம் நாட்டுடன் வியாபாரஞ் செய்திருக்கின்றனர்.

கிப்ளிங் என்ற ஓர் மகா கவி ஐரோப்பாவிலிருந்து வரும் தேசாந்திரிகளுக்கு, இந்தியாவிலுள்ள புண்ணிய நதிகளையும், அழகிய கோபுரங்களையும், வலிவு பெற்ற பட்டாணிகளையும், தாஜ்மஹாலையும் அழகாகச் சித்தரித்திருக்கிருர். தேசாந்திரிகள் வடக்கே சென்று பெருங் காக்ஷிகளைக் காண்கிருர்கள். ஆனல் அவர்கள், இளங்காற்று வீசும தென்னந் தோப்புகளையும் உட்பிரதேசத்தி விருந்து வரும் அழகிய வாய்க்கால்களையும், அவ்வாய்க்கால்களில் அழகாக ஊர்ந்து செல்லும் படகுகளையும் பார்க்க மறந்து விடுகிருர்கள்.

# BOOKS

By
**K. S. VENKATARAMANI**

**JUST PUBLISHED**

| | | Rs. As. |
|---|---|---|
| 1. **A Day with Sambhu** (In Hindi) | ... | 0 3 |

| | Rs. A. |
|---|---|
| 2. **Jatadharan & other Stories** (A collection of Short stories) ... | 1 8 |
| 3. **Kandan, The Patriot** (A Novel of New India in the making) Second Edition (Revised and Enlarged) | 2 0 |
| 4. **Renascent India** (A Study of Indian Problem) Third Edition | 1 0 |
| 5. **A Day with Sambhu** (Talks to a Boy) (In English. Second Edition) | 0 8 |
| 6. **The Next Rung** (A Constructive Study of Modern civilisation) Second Edition ... | 1 0 |
| 7. **Murugan, the Tiller** (A Novel of Indian Rural Life) Third Edition | 2 0 |
| 8. **On the Sand-Dunes** (Musings of Life in Free Verse) Second Edition | 1 0 |
| 9. **Paper Boats** (Sketches of Indian Village life) Fourth Edition ... | 1 0 |

*Booklets :*

| | |
|---|---|
| 1. **The Indian Village** (A Ten-Year Plan) ... | 0 8 |
| 2. **Dr. Annie Beasant** A Tribute ... | 0 4 |

| | Rs. A. |
|---|---|
| 3. **High Ways of Astrology** By Kumbha. Second Edition ... | 1 8 |
| 4. **Venkatramani:** Writer and Thinker By Manjeri S. Isvaran ... | 0 8 |

*In Tamil :*

| | |
|---|---|
| 1. **Kandan, The Patriot** (By the Author himself) ... | 1 0 |
| 2. **Murugan The Tiller** By Krishna Kumari (M. L. J. Office, Mylapore) | 1 8 |
| 3. **The Indian Village** (By the Author himself) ... | 0 2 |

*In Telugu :*

| | |
|---|---|
| 1. **Murugan, The Tiller** By P. Ramabrahmam (Andhra Patrika Office, Madras) ... | 1 8 |
| 2. **Kandan, The Patriot** (Ramaswami Sastrulu & Sons, Madras) ... | 1 4 |
| 3. **A Day with Sambhu** (Ramaswami Sastrulu & Sons, Madras) ... | 1 4 |

*In Sanskrit :*

| | |
|---|---|
| 1. **A Day with Sambhu** By Y. Mahalinga Sastri ... | 0 4 |

## *SOME OPINIONS*

1. Mr. Venkataramani writes beautifully about Indian village life. I have read books of his for some years and now "Paper Boats" is in its third edition. Charming and accurate descriptions: attractive essays.—HAMILTON FYFE in *The Daily Chronicle.*

2. Mr. Venkataramani is a Village prose-poet. He frames a political programme while he plays the lyre.—*The Literary Guide.*

3. An Indian who writes with rare charm and sympathy about his own people.—J. A. SPENDER in *The Changing East.*

4. One of the foremost writers of India; an Indian Thinker.—*Public Opinion.*

The following books have been approved for Library use by the Madras Text-Book Committee: Vide Fort St. George Gazette (Part IB) Supplement dated 2nd June 1936. (Consolidated list of approved books).

*Approved for Library use :—*

| | Vide page of the Ft. St. George Gazette | | Rs. A. |
|---|---|---|---|
| *English :* | | | |
| Paper Boats | 57 | ... | 1 0 |
| A Day with Sambhu | 57 | ... | 0 8 |
| The Indian Village | 53 | ... | 0 4 |
| *Tamil :* | | | |
| Our Village Life | 155 | ... | 0 2 |
| *Sanskrit :* | | | |
| *Approved for Class use :—* | | | |
| Sambhu-Caryopadesa By Y. Mahalinga Sastri | 215 | ... | 0 4 |

**SVETARANYA ASHRAMA, 312, Thambu Chetty Street, Madras.**

ரம்மியமான முகத்தோற்றம்



ரம்மியமான முகத்தோற்றமே உங்களுக்கு விலையுயர்ந்த ஐஸ்வர்யம்.

சர்ம சாஸ்திர நிபுணர்கள் வேப்ப எண்ணெய் சத்தை சருமத்திற்கு ஒப்பற்ற டானிக் என்று சொல்கின்றனர். வேப்ப எண்ணெய் சத்து சேர்த்து செய்யப்படும் சோப் மார்கோ ஒன்றுதான்.




மார்கோ ஸோப்

வாசனையும் மருந்து சத்துமுள்ளது

கல்கத்தா கெமிக்கல்ஸ்.


*Edited & Published by K. S. Venkataramani at No. 312, Thambu Chetty Street, Madras and Printed by T. K. Venkatesan, at The Jupiter Press, 16, Sembudoss Street, G. T., Madras*